கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு

எஸ். தாயப்பன்

கிறிஸ்தவத்தை, கிறிஸ்தவர்களை எதிர்த்த
சாம்ராஜ்யங்கள், சக்கரவர்த்திகள், மன்னர்கள்,
நாடுகள், நகரங்கள், ஜாதிகள் என்ன ஆனார்கள்
என்பதற்கு இதோ சரித்திர ஆதாரங்கள்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு

(கிறிஸ்தவத்தை, கிறிஸ்தவர்களை எதிர்த்த சாம்ராஜ்யங்கள், நாடுகள், நகரங்கள், சக்கரவர்த்திகள், மன்னர்கள், ஜாதிகள் என்ன ஆனார்கள் என்பதற்கு இதோ சரித்திர ஆதாரம்)

எஸ்.தாயப்பன்

நன்கொடை ரூ.10/-

கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு - ஆகஸ்டு 2014 - 5000 பிரதிகள்

இந்த நூல்கள் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி:
எஸ்.தாயப்பன்
12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044 - 22234526. மின்அஞ்சல்: **sakthiprabba@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1

MO, DD அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்:

1 முதல் 15 விசிடி அனுப்ப ரூ.20/-
16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.35/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து **M** சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். அல்லது ஷேர் ஆட்டோவில் ரூ.10/- கொடுத்தால் மஹாலட்சுமி நகர் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுவார்கள். இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் **K.K.** மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலதுபுற ஜி.டி.நாயுடு தெருவில், இடதுபுறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என **MO** படிவத்தில் அல்லது **EMO** வில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய **MO** க்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன் / செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள். தேவை ஏற்படின் உங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

ஆசிரியரின் பிற நூல்கள்:

1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்)	3,20,000
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்)	60,000
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்)	40,000
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு)	10,000
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி)	10,000
6.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா)	4,000
7.	**My Cry & Joyful New Life (English)**	45,000
8.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	1,05,000
9.	பாவத்தின் சம்பளம் நரகம்	85,000
10.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	40,000
11.	கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்	25,000
12.	என் ஊழியக்காரனே?	20,000
13.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000
14.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	25,000
15.	நீங்களே எனக்கு சாட்சிகள்	10,000
16.	உண்மையான கடவுள் யார்?	15,000
17.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	15,000
18.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	10,000
19.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 1	10,000
20.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 2	10,000
21.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1	20,000
22.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2	20,000
23.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு?	10,000
24.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி டாக்டர் கிறிஸ்டோபர்	10,000
25.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடிவான்	3,000
26.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000
27.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000
28.	பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை)	5,000
29.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	5,000
30.	ஓர் அவசர அறைகூவல்	5,000
31.	கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரி ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும்	5,000
32.	ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அமைப்பு	5,000
33.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000
34.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில்	....
35.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி (ரூ.2.50)	10,000
36.	தமிழ்நாட்டில் உள்ள வட இந்தியர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஒரு உன்னத அழைப்பு (ரூ.2.50)	5,000

சீடிக்கள்

1.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்)	3,20,000
2	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்)	40,000
3.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி)	25,000
4.	**VCD.** என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (மலையாளம்)	5,000
5.	**VCD.** எழுந்து கட்டுவோம் (தமிழ்)	15,000
6.	**VCD.** முக்திக்கு வழி கிறிஸ்துவமே (தமிழ்)	15,000
7.	**VCD.** கதாகாலட்சேபம் (தமிழ்)	15,000
8.	தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே	10,000

பொருளடக்கம்

எதுவுமில்லாமற் போன எகிப்து தேசம்	5
யகோவா தேவனின் எரிச்சலுக்கு ஆளான ஏதோமியர்கள்	11
சிதிலமாகிப் போன சேயீர் மலை	18
லீபனோன் சாபலோனாக மாறியதே	20
அழிந்துபோன அசீரியா தேசம்	25
மண்ணோடு மண்ணாகிப் போன கோரோசீனி, பெத்சாயிதா, கப்பர்நகூம் பட்டிணங்கள்	28
அங்கலோன் பட்டிணம் அழிந்து போகும்	33
எக்ரோன் எதுவுமில்லாமற் போகும்	35
காசா கதிகலங்கிப் போகும்	36
காத் நகரம் காணாமற் போயிற்று	40
அஸ்தோத் அழிந்து போகும்	41
அமலேக்கியர் அடியோடு அழிவார்கள்	42
எய்ட்ஸ் என்னும் உயிர் கொல்லி நோய்	44
இஸ்ரேலுடன் நடந்த யுத்தத்தில் ஆண்டவர் செய்த அற்புதங்கள்	48
ரஷ்யாவில் உணவுப் பஞ்சம்	57
ரோமச் சக்கரவர்த்திகள் சாபத்திற்குள்ளானார்கள்	70

கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு

எதுவுமில்லாமல் போன எகிப்து தேசம்

உலகத்தின் 6000 ஆண்டு வரலாற்றில் முதல் 3000 ஆண்டுகள் எகிப்து ஒரு தலைசிறந்த நாடாக கி.மு.1400க்கு முன்பாகவே அதாவது மோசேயின் காலத்திற்கு முன்னதாகவே எகிப்து அறிவியலிலும், சிற்பக் கலைகளிலும், நாகரீகத்திலும், கட்டிடக் கலையிலும், பற்பல சாஸ்திரங்களிலும் மிகவும் சிறந்து விளங்கியது. அது ஒரு பலமான ராஜ்யமாக, உலகத்தின் களஞ்சியமாக பெயர் பெற்று செழித்தோங்கியிருந்தது. எகிப்தின் நதியைப் பற்றியும், பட்டிணங்கள் பற்றியும் அதன் அதிபதிகள் பற்றியும் ஆண்டவர் கூறிய வாக்குத் தத்தங்களை **'நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்'** புத்தகத்திலும் **'சிலை வணக்கம் சின்னா பின்னப்படுத்தியதே'** என்கிற நூலிலும் காணலாம்.

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் எகிப்து தேசம் நீல நதியின் இரு கரைகளிலும் 12 முதல் 32 மைல் அகலமும், 550 மைல் நீளமுள்ள நல்ல நீர்ப்பாசன வசதியுள்ள ஒரு செழிப்பான நிலப்பரப்பாகும். அந்த நதியின் டெல்டா பகுதி மக்கள் அதிகம் வசித்த நெருக்கமான ஒரு பகுதியாகும். மேற்கே மணற்பாங்கான பாலைவனமும், கிழக்கு பாலைவனமும், 6000 முதல் 7000 அடி வரை உயரம் உள்ள மலைத் தொடர்களும் உள்ள ஒரு நாடு. இந்த மலைகளில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்களினால் நோப் (மெம்பீஸ்), நோ (தீபீஸ்) முதலிய பெரிய பட்டிணங்களும், நூற்றுக்கணக்கான பெரிய பெரிய பிரமீடுகளும் கட்டப்பட்டன. கணக்கிலடங்காத சிலைகளும் செதுக்கப்பட்டன. மருத்துவக்

கலையில் முன்னேற்றம் அடைந்திருந்தது என்பதை நிரூபிக்க அக்காலத்தில் இருந்த பார்வோன்களின் பதப்படுத்தப்பட்ட சடலங்கள் இன்னும் உருக்குலையாமல் இருக்கின்றது என்பதே சான்று.

இஸ்ரவேலரை அடிமை கொண்டதால் இம்சை

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்ட யாக்கோபும், அவருடைய பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும், அடங்கிய இஸ்ரவேல் கூட்டம் சுமார் கி.மு. 1706ல் எகிப்திற்குப் போய்ச் சேர்ந்து 430 ஆண்டுகள் அங்கே இருந்தனர். யோசேப்பை அறியாத அரசர்கள் எகிப்தை ஆளத் தொடங்கிய பிறகு இஸ்ரவேலர்கள் எகிப்தியர்களுக்கு அடிமைகளாக ஆக்கப்பட்டு பித்தோம், இராமசேஸ் என்னும் பண்டக சாலைப் பட்டிணங்களையும், அநேக பிரமிடுகளையும் கட்டினார்கள். 400 வருட அடிமைத்தளத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திய மன்னர்களாலும், அவர்களுடைய சேனைகளாலும் மிகக் கடுமையாக உழைக்கும்படிக்கு வற்புறுத்தப்பட்டார்கள். ஒரு சிறிது கூட மனிதாபமானமற்ற, ஈவு இரக்கமின்றி, கொடுமைக்கு ஆளானார்கள். இஸ்ரவேல் ஜனங்களை கொடுமைப்படுத்திய போது, அவர்கள் கர்த்தரை நோக்கிக் கதறினார்கள். தேவனுடைய ஜனங்களை கொடுமைப்படுத்தியதால் கர்த்தர் தமது தீர்க்கதரிசிகளின் மூலமாக எகிப்து தேசத்தைக் குறித்துக் கூறிய நியாயத் தீர்ப்பை பாருங்கள்.

எசேக்கியல் 30:16,10, 13 (கி.மு.572) (6) **'எகிப்தை ஆதரிக்கிறவர்களும் விழுவார்கள். அதனுடைய பலத்தின் முக்கியத்துவம் தாழ்ந்து போம்'** என்று கர்த்தர் சொல்லுகிறார். (10) **'கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரைக் கொண்டு எகிப்தின் சந்ததியை ஒழியப் பண்ணுவேன்'** (13) **'கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், நான் நரகலான விக்கிரஹங்களை அழித்து, நோப்பின் சிலைகளை ஒழியப்பண்ணுவேன். இனி எகிப்து தேசத்தில் ஒரு அதிபதியும் இரான்.'**

எசேக்கியல் 29:14-15 (கி.மு. 572) (14) **'எகிப்தின் சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை அவர்களுடைய ஜனன தேசமான பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப் பண்ணுவேன். அங்கு அவர்கள் அற்ப ராஜ்யமாய் இருப்பார்கள்.'** (15) **'அது இனி ஜாதிகளின் மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும், அற்பமானதாய் இருக்கும். அவர்கள் இனி ஜாதிகளை ஆளாதபடிக்கு அவர்களை குறுகிப் போகப் பண்ணுவேன்.'**

ஆண்டவர் சொன்னது அப்படியே நிறைவேறியது

இது எப்படி நிறைவேறியது என்று பாருங்கள். கி.மு. 605ம் ஆண்டு நேபுகாத்நேச்சார் எகிப்தை ஜெயித்து தனது ஸ்தானாதிபதியை ஆள வைத்தார். கி.மு. 7ம் நூற்றாண்டில் முகமதியர் படையெடுத்து நோப் பட்டிணத்தின் சிலைகளை எல்லாம் நாசம் பண்ணி, தேசத்தையும் கொள்ளையடித்தனர். நேபுகாத்நேச்சாருக்குப் பிறகு, கி.மு. 525ல் பாரசீகர் **(Camyses)** எகிப்தை வென்று ஆண்டனர். கி.மு. 332ல் மகா அலெக்சாண்டர் (கிரேக்க மன்னன்) ஜெயித்தான். அவனுக்குப் பின் அவனுடைய சேனைத் தலைவனுடைய (டோல்மி) சந்ததியார் ஆண்டனர். கி.மு. 48ல் ரோமர் ஜெயித்து ஆண்டனர். கி.பி. 7ம் நூற்றாண்டில் முகமதியர் ஜெயித்து ஆண்டனர். கி.பி.15ம் நூற்றாண்டில் பிரான்ஸ் ஜெயித்து ஆண்டது. கி.பி. 1882 - 1922 மட்டும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஆண்டது. 18.6.1953ல் எகிப்து குடியரசு நாடாக ஆகியது. அதன் முதல் அதிபராக கமால் அப்துல் நாசர் பதவி ஏற்றார். அவர் ஒரு சாதாரண அரேபியக் குடிமகன். அவருக்கு அடுத்து வந்தவர்களில் ஒருவரும் எகிப்து அரச பரம்பரையை சேர்ந்தவர்கள் அல்லர். இப்படியாக இனி பார்வோன் குடும்பத்தினர் எகிப்தை ஆள மாட்டார்கள் என்கிற வாக்கும் நிறைவேறியது.

துன்புறுத்திய தேசம் துக்கப்பட்டுப் போனது

2000 ஆண்டுகளுக்கு மேலாக பற்பல தேசத்தார் எகிப்தை பிடித்து ஆண்டு அதன் ஆஸ்திகளை எல்லாம் தங்கள் தங்கள் நாடுகளுக்கு கொள்ளையடித்துச் சென்றதின் நிமித்தம் எகிப்து

கொஞ்சம் கொஞ்சமாக க்ஷீண நிலை அடைந்து மற்ற ராஜ்யங்களை விட ஏழை நாடாக மாறிவிட்டது. எகிப்தைச் சுற்றியுள்ள மற்ற அரேபிய நாடுகளுடன் ஒப்பிடும்போது அதனுடைய உள்நாட்டு வைப்பு நிதி, இறக்குமதி, ஏற்றுமதி, தனிநபர் வருமானம் எல்லாமே மிகக் குறைவாகவே இருக்கிறது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இன்னும் எரேமியா தீர்க்க தரிசியின் மூலம் ஆண்டவர் கூறியதும் நிறைவேறியிருக்கிறது. எரேமியா 46:11 (கி.மு.607)ல் **'எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ கிலேயாத்துக்குப் போய் பிசின் தைலம் வாங்கு. திரளான அமிழ்தங்களை நீ கூட்டுகிறது விருதா. உனக்கு ஆரோக்கியமுண்டாகாது'** என்று உரைத்தார்.

தேவன் தெரிந்து கொண்ட ஜனங்களை துன்புறுத்தியதினால் தேவகோபத்திற்கு ஆளான தேசத்தில் என்னவிதமான மாறுதல்கள் செய்தாலும் அது முன்னேறவே முடியாது. அதுபோலவே எகிப்தும் தன் முன்னிலையை அடைய முடியாது. இன்னும் அதிகமாகவே க்ஷீண திசையை அடையும் என்கிற கர்த்தருடைய எச்சரிக்கையை எரேமியா மேற்கண்ட வார்த்தைகளின் மூலம் அறிவிக்கிறார்.

சீர்படுத்தும் சீரமைப்பு சீரழிந்து போகும்

எகிப்தை ஆண்ட அநேக அரசர்கள் அதனுடைய பொருளாதாரத்தை சீர் செய்ய எடுத்த முயற்சிகள் எல்லாமே இதுவரை விருதாவாகவே போய்விட்டன. சூயஸ் கால்வாயின் மூலமாக அதிக வருமானம் வரும் என்று அதை வெட்டினார்கள். என்றாலும் எகிப்திற்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. பிரிட்டனின் ஆட்சிக் காலத்தில் பல பல சீர்திருத்தங்கள் செய்து பார்த்தும் அவைகள் ஒன்றும் பலனளிக்கவில்லை. ரஷ்யாவின் உதவியினால் நீல நதியின் குறுக்கே அஸ்வான் அணைக்கட்டு ஒன்று கட்டப்பட்டது. அதனால் நன்மையை எவ்வளவு எதிர்பார்த்தார்களோ அதை விட தீமையும், பிரச்சனைகளும் அதிகமாக உருவாகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

அறிவு ஜீவிகள் அறிவிலியானார்கள்

இப்படியாக ஒரு காலத்தில், அதி முன்னேற்றமடைந்த, மிகச் செழிப்பான, பலமுள்ள ஒரு தேசமாக இருந்த எகிப்து தேவன் தமக்கென தெரிந்து கொண்ட இஸ்ரவேல் ஜனங்களை (கிறிஸ்தவர்களை) துன்புறுத்தியதின் நிமித்தம் இன்று மிகவும் க்ஷீண நிலையை அடைந்திருக்கிறது என்பதைக் கண்கூடாக காண முடியும். அதுமாத்திரமல்ல, அது இன்னும் மோசமடையத் தக்கதாக அந்த தேசத்தின் ஞானிகள், அறிவு ஜீவிகள், மந்திரிகள், ஆலோசனைக்காரர்களின் ஆலோசனைகளை அவமாக்கி தேசத்து ஞானிகளை மூடராக்கிப் போட்டார். அதையும் தன் தீர்க்கதரிசியின் மூலமாக கிறிஸ்துவுக்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைத்தார்.

ஏசாயா 19:13-14 (கி.மு.714)ல் கூறியிருப்பதைப் பாருங்களேன். (13) **'சோவான் (zoan) பிரபுக்கள் மூடரானார்கள். நோப்பின் பிரபுக்கள் மோசம் போனார்கள். எகிப்தையும் அதன் கோத்திரத் தலைவரையும் வழி தப்பப் பண்ணுகிறார்கள்'** (14) **'கர்த்தர் அதன் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப் பண்ணினார். ஆனது கொண்டு வெறியன் வாந்தி பண்ணி, தள்ளாடித் திரிகிறது போல அவர்கள் எகிப்தை அதன் எல்லாச் செய்கைகளிலும், தள்ளாடித் திரியப் பண்ணுகிறார்கள்.'**

பூனையும் யானையை வென்றது

14.5.1948ல் இஸ்ரேல் தேசம் ஒரு தனிச்சுதந்திர நாடாக பிரகடனம் செய்யப்பட்டது. சுற்றிலும் இருந்த அனைத்து முஸ்லீம் நாடுகளுக்கும் இது அதிகமான எரிச்சலையும், கோபத்தையும் உண்டாக்கியது. இஸ்ரேல் தேசம் இப்பொழுதுதான் சுதந்திரம் அடைந்த ஒரு நாடாக இருப்பதால் மிக எளிதாக அந்த தேசத்தை முழுவதுமாக அழித்து உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்கிற பெயரே இல்லாதபடி செய்துவிட இதுவே சரியான தருணம் என்று ஞானிகள் ஆலோசனை கூறினர். லாஜிக்கலாகப் பார்த்தால் அவர்களின் ஆலோசனையை எவ்விதத்திலும் குறைகூறவே முடியாது. அதுவும் எகிப்து

மாத்திரம் படையெடுத்துப் போகவில்லை. எகிப்துடன் அரேபிய லீக்கில் அங்கம் வகிக்கின்ற ஜோர்டான், இராக், சிரியா, லிபனோன், சவுதி அரேபியாவின் கூட்டுப் படைகளோடு மோதுகின்ற சமயத்தில் நிச்சயம் இஸ்ரேல் தோற்றுத்தான் போகும். ஏனென்றால் படை பலத்தைப் பார்த்தால் அது யானைக் கும் பூனைக்கும் உள்ள வித்தியாசத்தையே அது காட்டும். தேவன் தெரிந்து கொண்ட ஜனங்களுக்கு எதிராக எத்தனை தேசங்கள் கூட்டு சேர்ந்து எதிர்த்தாலும் என்ன? கர்த்தர் அவர்களோடு இருக்கிறாரே, இதுவரை ஐந்து தடவை சக அரபு நாடுகளோடு சேர்ந்து இஸ்ரேலின் மீது படையெடுத்து விட்டது. ஐந்து தடவை யும் நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு படுதோல்வியையே எகிப்தும் அதன் சக அரபு நாடுகளும் சந்தித்தன.

1947, 1956, 1965ல் ரஷ்ய ஆயுதங்கள், உதவியுடன் யுத்தத்திற்குப் போனது. இப்போது சிரியாவும் எகிப்துக்கு துணை நின்றது. யார் என்ன துணை நின்று உதவி செய்தும் என்ன பிரயோஜனம்? தோல்வி மேல் தோல்விதான் எகிப்து அடைந்தது. பிறகு 1967ல் எகிப்து, சிரியா, லிபியா ஆகிய மூன்று நாடுகளும் கூட்டு சேர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு என்கிற பெயரில் ரஷ்யாவின் ஆயுதங்களுடன் 900 டாங்குகள், 90,000 படை வீரர்களுடனும், சிரியா, ஜோர்டான் நாடுகளின் துணையுடனும் யுத்தத்தை ஆரம்பித்தது. ஆறு நாட்களில் இஸ்ரேல் மூன்று தேசங்களின் படைகளையும் முறியடித்து எகிப்திடமிருந்து சீனாய் தீப கற்பம் முழுமையையும், சீரியாவிடமிருந்து கோலன் பகுதியையும், ஜோர்டானிடமிருந்து யோர்தான் நதிக்கு மேற்கு கரைப் பகுதியையும், யோர்தானைச் சேர்ந்த எருசலேம் நகரமும் இஸ்ரேலின் வசமாயின. இவைகள் மட்டுமின்றி சூயஸ் கால்வாயும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டபடியால் எகிப்தின் ஒரே பெரிய வருமானம் நின்று போய் அதன் பொருளாதாரம் வெகுவாக சீர்குலைந்தது.

எகிப்தின் ஆலோசகர்கள் ஏமாளியாகினர்

'வெறியன் தள்ளாடித் திரிகிறது போல' எகிப்தின் ஆலோசகர்கள் தத்தளித்தனர். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக மற்ற

முஸ்லீம் நாடுகளின் எதிர்ப்புக்களுக்கிடையில் 1979ல் இஸ்ரேலுடன் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு எகிப்து வந்து விட்டது. இதனால் மற்ற உறவு நாடுகள் எகிப்தை தங்கள் கூட்டணியிலிருந்து ஒதுக்கி விட்டன. 1987 ஜனவரி மாதம் 31ம் தேதி தினமணி நாளிதழ் ஒரு செய்தியை வெளியிட்டது. அதன் சாராம்சத்தைப் பாருங்கள். தலைப்பு: 'முக்கிய உடன்பாடு இன்றி இஸ்லாமிய மாநாடு முடிவுற்றது' - 'குவைத்தில் நடைபெற்ற 46 உறுப்பு நாடுகள் கொண்ட 5வது இஸ்லாமிய உச்சி மாநாடு முஸ்லீம் நாடுகளின் முக்கிய பிரச்சனைக்குத் தீர்வு, உடன்பாடு எதுவும் காணாமலேயே முடிவுற்றது. சீரியா எகிப்துக்கிடையே கருத்து உடன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சி தோல்வியுற்றது.

ஆலோசனைகளை அவமாக்கும் ஆண்டவர்

தேவன் தமக்கென்று தெரிந்து கொண்ட ஜனங்களுக்கு எதிராக எத்தனை நாடுகள் ஒன்று சேர்ந்து நவீன ஆயுதங்களுடன் கூட்டுப்படை அமைத்து போர் தொடுத்தாலும் தோல்வியைத் தான் தழுவ வேண்டி வரும். அது மாத்திரமல்ல. அந்த ஜனங் களுக்கு எதிராக யார் என்ன ஆலோசனைகளைக் கூறினாலும் அவைகளையும் ஆண்டவர் அவமாக்குவார். மேலும் இப்படி ஆலோசனைகளையோ, திட்டமிடவோ கூட்டப்படுகின்ற கூட்டங்களிலேயும், தாறுமாறுகளின் ஆவியை அனுப்பி குழப்பத்தை உண்டுபண்ணி விடுவார் என்பதையே எகிப்தைப் பற்றிய மேற்கண்ட தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் நிரூபிக் கின்றன. எகிப்தைக் குறித்தும், அதற்கு எதிராக ஆண்டவர் கூறிய தீர்க்க தரிசனங்கள் குறித்தும் இன்னும் விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நான் எழுதியுள்ள **'நிறைவேறியுள்ள தீர்க்க தரிசனங்கள்'** - பாகம் 3ஐயும் **'சிலை வணக்கம் சின்னாபின்னப் படுத்தியதே'** என்ற நூலையும் படியுங்கள்.

யகோவா தேவனின் எரிச்சலுக்கு ஆளான ஏதோமியர்கள்

ஈசாக்கின் மனைவி ரெபெக்காளுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்தவன் ஏசா. இளையவன் யாக்கோபு (ஆதி 25:21,

26). முதலில் யாக்கோபு தன்னுடைய மூத்த சகோதரன் ஏசாவின் சேஷ்ட புத்திர பாகத்தைத் தான் தயாரித்த சிவப்பான பயற்றங் கூழைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டான் - (ஆதி 25:29-34). அடுத்து அவன் தன் தகப்பன் ஈசாக்கை ஏமாற்றி ஏசாவுக்கு கிடைக்க வேண்டிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டான் (ஆதி 27:1, 28:5). இதன் நிமித்தம் இந்த இரண்டு பேருடைய சந்ததிக்கும் பகை மூண்டது. ஏசாவுக்கு ஏதோம் என்கிற பெயரும் உண்டு. (ஆதி 25:30, 36:8) ஏசா கானானியப் பெண்கள் இருவரையும், இஸ்மவேலின் மகளையும் திருமணம் செய்து சேயீர் மலைப்பகுதியில் குடியேறினான் (ஆதி 36:8). ஏசா ஆண்டவரைப் பின்பற்றாமல் போனான். அவனோட சந்ததியாரும் இறைவனைப் பற்றி அக்கறைப்படாதவர்களாயும், கடவுளே இல்லை என்ற நிர்விசாரிகளாகவும் வாழ்ந்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். என்றாலும் 2 நாளா 25:14ல் அவர்கள் விக்கிரஹ ஆராதனைக்காரர்களாக இருந்தனர் என்றும் பார்க்கிறோம்.

ஏதோமியன் உன் சகோதரன்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானான் தேசத்துக்கு திரும்பும்போது அவர்கள் ஏதோம் வழியாக வரவேண்டியிருந்தது. அதற்கு ஏதோமின் இராஜா வழி தர மறுத்து அவர்களை எதிர்த்தபடியால் இஸ்ரவேலர்கள் ஏதோமை விட்டு வழி விலகிப் போனார்கள் என்று எண் 20:14-21ல் காண்கிறோம். உபாகமம் 23:7ல் ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு **'ஏதோமியனை அருவருக்காயாக. அவன் உன் சகோதரன்'** என்று கட்டளை கொடுத்தார். என்றாலும் ஏதோமியர் அவர்களைப் பகைத்து அடிக்கடி யுத்தத்திற்கு வந்தனர். வரலாற்றைப் பார்த்தால் சவுல் காலம் தொடங்கி இஸ்ரவேலருக்கும் ஏதோமியருக்கும் யுத்தங்கள் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்ததைக் காண முடியும். ஏதோம் நாடு சவக்கடலுக்குத் தென் கிழக்கே 120 மைல் நீளமும், 80 மைல் அகலமுமுள்ள ஒரு பகுதி. இது இதுமேயா என்று கிரேக்கர்களாலும், ரோமர்களாலும் அழைக்கப்பட்டது. இது சேயீர் மலைப் பிரதேசத்தில் இருந்தது

விலகிப் போனாலும் விரட்டி வம்புக்கிழுத்தனர்

'ஏதோமியன் உன் சகோதரன். அவனை அருவருக்காயாக' என்று ஆண்டவர் சொன்ன உடனே இஸ்ரவேலர்கள் ஏதோமை விட்டு விலகி அவர்களின் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

இஸ்ரவேலர்கள் விலகிப் போனாலும், ஏதோமியர் அவர்களுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தனர். ஆகையினால் ஆண்டவர் தமது தீர்க்கதரிசிகள் ஏசாயா, எரேமியா, எசேக்கியல், யோவேல், ஆமோஸ், ஒபதியா மூலம் ஏதோம் நாட்டிற்கும், ஏதோமியருக்கும், அவர்களின் தலைநகருக்கும் கொடுக்கப் போகும் தண்டனையை முன்னறிவித்தார். கிறிஸ்தவர்களை எதிர்ப்பவர்கள் அவர்களுக்கு என்ன தொந்தரவு கொடுத்தாலும் சரி, திருப்பித் தாக்காமல், பழிக்குப் பழி வாங்காமல் அமைதியாக, பொறுமையாக, சகிப்புத் தன்மையோடு இருந்து விடுகின்றனர். இது அவர்களுடைய பலவீனத்தைக் காட்டவில்லை. கிறிஸ்தவர்கள் மைனாரிட்டியாக இருக்கலாம். நேரடியாக எதிர்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால் அவர்களிடமும் பணம் இருக்கிறது. பதவிகள் இருக்கின்றன. கிறிஸ்துவுக்காக ரத்த சாட்சியாக மரிப்பதற்கும் தயாராக இருப்பவர்கள் கிறிஸ்தவர்கள். திருப்பித் தாக்கவோ, அல்லது எதிர்ப்பவர்கள் வாழும் பகுதியில் ஒரு வெடிகுண்டு வைக்கவோ, ரயிலைக் கவிழ்க்கவோ, தண்டவாளத்தை பெயர்த்து எடுப்பதற்கோ, ஏ.கே.47 வாங்கி தாக்குவதற்கோ எவ்வளவு நேரம் ஆகும்? அப்படி சில ஜாதிகள், அமைப்புகள், மதவாதிகள் செய்வது போல கிறிஸ்தவர்களுக்கும் செய்யத் தெரியாதா என்ன? பிறகு ஏன் செய்யுறது இல்லை? ஏன்னா அப்படி செய்யச் சொல்லி இயேசு கிறிஸ்து சொல்லவில்லை. பைபிளும் சொல்லவில்லை.

பழிக்குப் பழி வேண்டாம்

'உங்கள் சத்ருக்களையும் சிநேகியுங்கள். உங்களை துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும், நித்திக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். பழிக்குப் பழி வாங்க வேண்டாம். ஒருவன் உனது வலது கன்னத்தில் அறைந்தால், உன் இடது கன்னத்தையும் காட்டு' என்றுதான்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். அதைக் கட்டளையாக ஏற்று கிறிஸ்தவர்களுக்கு எதிராக எத்தனை வன்முறைகள், தீவிரவாதங்கள் நடந்தாலும் அவர்கள் பொறுமையோடு இருப்பதற்குக் காரணமே ஆண்டவரோட வார்த்தைகள்தான். அப்படியே கிறிஸ்தவர்கள் சும்மா இருந்தாலும், ஆண்டவர் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டார். அவர்களுக்காக அவரே களம் இறங்குவார். எதிர்ப்பவர்களை, துன்பப்படுத்துகிறவர்களை ஒன்றுமில்லாமல் செய்து விடுவார். இதையெல்லாம் ஏற்கனவே நான் **'கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு'**ங்கிற புத்தகத்தில் பல சான்றுகளோடு எழுதியிருக்கிறேன். இப்போ இஸ்ரவேலரை எதிர்த்த ஏதோமியர் என்ன பாடுகளுக்கு ஆளானார்கள் என்று பாருங்கள். தமது ஆறு தீர்க்கர்கள் மூலம் அவர்களை கடுமையாக எச்சரித்தார்.

ஏதோமியருக்கு எதிரான ஏவுகணைகள்

யோவேல் 3:19 (கி.மு.800) மூலமாகவும், ஆமோஸ் 1:11-12 (கி.மு.787), ஏசாயா 34:6-15 (கி.மு.713), எரேமியா 49:10, 13, 15-18 (கி.மு.600) எசேக்கியல் 25:13 (கி.மு. 590), 35:1-9, 14-15 (கி.மு. 587), ஒபதியா 1:3-4, 6, 10, 18 (கி.மு.587) மூலமாகவும், தன் கோபத்தை வெளிப்படுத்தினார். இந்த தீர்க்கதரிசன வசனங்கள் எல்லாமுமே என்னுடைய **'நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்** - பாகம் 3'லும், **'சிலை வணக்கம் சின்னா பின்னப்படுத்தியதே'** என்கிற நூலிலும் எழுதியிருக்கிறேன். ஆகவே இந்த தீர்க்கர்கள் கூறியுள்ளதின் சாராம்சத்தை மாத்திரம் இங்கே கீழே கொடுத்துள்ளேன்.

சாராம்சம்

1. ஏதோம் தேசம் பாழான வனாந்திரமாகும் (யோவேல் 3:19, எசே 35:3)
2. இனி அந்த தேசத்தில் எவரும் குடியிருக்கப் போவதில்லை (எரேமியா 49:18)
3. ஏதோமியர்கள் இஸ்ரவேலராலும், புற ஜாதியாராலும் ஜெயிக்கப்படுவார்கள் (எசே 25:14)

4. ஏதோம் தேசத்தில் வர்த்தகமும் வியாபாரமும் நின்று போகும். (எசே 35:7)
5. அந்த தேசத்தில் இரத்தம் சிந்துதல் அதிகமாக இருக்கும். (ஏசா 34:6)
6. பட்டிணங்கள் தீக்கிரையாகி அங்கே முட்செடிகள் முளைக்கும். (ஏசா 34:14-15)
7. இனி அங்கே காட்டு மிருகங்களே குடியிருக்கும். (ஏசா 34: 14-15)
8. ஏதோம் என்கிற ஒரு நாடும், ஏதோமியர் என்கிற ஒரு ஜாதியும் இனி இல்லாமற் போய்விடும். (எரே 49:10)

மேற்கண்ட ஆண்டவரின் தீர்க்கதரிசன வார்த்தைகள் எப்படி நிறைவேறியுள்ளது எனப் பாருங்கள். யூதா இராஜ்ஜியத்தோடு சண்டை முடிந்த பிறகு கொஞ்ச காலம் சமாதானமாக இருந்த ஏதோமுக்கு அசீரியரால் தொந்தரவு ஏற்பட்டது. அதன் பிறகு பாபிலோன் மன்னர் படையெடுத்து ஏதோமை ஜெயித்தார்.

பாதுகாப்பான பட்டிணம் பாழானதே

ஏதோமின் தலைநகரான சேலா பட்டிணம் (பின்பு யொதியேல் என்ற மறு பெயர் பெற்று, அதன் பிறகு பெட்ரா என்றும் அழைக்கப்பட்டது) எவ்வளவு பாதுகாப்பான, இயற்கை அரண்கள் கொண்டு சூழப்பட்டு இருந்தது என்பதைப் பாருங்கள். அந்தப் பட்டிணத்தின் நாலு பக்கங்களிலும் செங்குத்தான மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் அது அமைந்திருந்தது. அங்கே சிகப்புக் கற்களினால் ஆன மலைச் சாரலில் ஒன்றின் மேல் ஒன்றாக வங்கிகளும், அரசாங்கக் கட்டிடங்களும், வியாபார ஸ்தலங்களும், வீடுகளும் குடைந்தெடுக்கப்பட்டு இருந்தன. இந்த நகருக்குள் நுழைய ஒரே ஒரு பாதைதான் உண்டு. சுற்றியுள்ள செங்குத்தான மலைகளின் மேலே ஏறி இறங்குவது என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அந்த ஒரே ஒரு பாதையும் மலையைக் குடைந்து ஒரு மைல் நீளமுள்ள ஒரு நீண்ட குகை போன்ற கெபி. அது 8 அடி முதல் 12 அடி வரை

அகலமும், 700 - 800 அடி வரை உயரம் உள்ளதாய் குடைந்தெடுக்கப்பட்டு இருந்தது. ஆகையால் அந்தப் பட்டிணத்தை பாதுகாப்பது மிகவும் எளிதாக இருந்தது. எகிப்து, அரேபியா, பாபிலோன், அசீரியா, சீரியா முதலிய நாடுகளுக்குப் போகும் ராஜபாதையில் அது இருந்தபடியால் ஒரு வியாபார முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகவும் இருந்தது.

ஏதோமை எச்சரித்த எரேமியா

இந்த பட்டிணத்தைப் பற்றித்தான் எரேமியா 49:16லும், ஒபதியா 1:31லும் **'கன்மலை வெடிப்புக்களாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து என்னைத் தரையிலே என்னைத் தள்ளுகிறவன் யார் என்று உன் அகந்தை உன்னை மோசம் போக்குகிறது. நீ கழுகைப் போல் உயரப் போனாலும், நீ நட்சத்திரங் களுக்குள்ளே உன் கூட்டைக் கூட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத் தள்ளுவேன்'** என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கிறிஸ்துவுக்கு முன் 6ம் நூற்றாண்டில் நெபோத்தியர் என்ற கிழக்கு தேசத்தார் (எசே 25:4) படையெடுத்து, ஏதோமியரை சேலாவிலிருந்து விரட்டியடித்து விட்டு அவர்களே குடியேறி னார்கள். அப்போது ஏதோமியர் ஏதோமின் வடபகுதிக்கும், யூதேயாவின் தென்பகுதிக்கும் குடியேறத் தள்ளப்பட்டார்கள். நெபோத்தியர் இஸ்ரவேலரின் சந்ததியார். இவர்கள் நாலு நூற்றாண்டுக் காலம் இந்தப் பகுதியை ஆண்டனர். தள்ளுபடி ஆகமம் 1 மக்க பேயர் 5:3ன்படி ஜான் ஷிர்க் கானஸ், சிமியோன் என்னும் யூதத் தலைவர்களால் ஏதோம் நாடு கி.மு. 160 வாக்கில் ஜெயிக்கப்பட்டு ஒபதியா 1:16ம் வசனத்தின்படி **'யாக்கோபு வம்சத்தார் அக்கினியாகி ஏசா வம்சத்தாரை கொளுத்தி அவர்களில் மீதியிராதபடி பட்சிப்பார்கள்'** என்பதுவும் நிறைவேறியது.

ஏதோமின் சந்ததி எதுவுமில்லாமல் அழிந்தது

ரோமர்கள் கி.மு.63ல் எருசலேமைப் பிடிக்க முற்றுகை யிட்டபோது 20,000 இதுமேயர்களை (ஏதோமியரை) பட்டிணத்திற்குள் அனுப்ப அங்கு அவர்கள் கொலையும், கொள்ளையும் அடித்து பட்டிணத்தை நாசம் பண்ணினார்கள்.

ரோமர்கள் யூதேயாவை ஆள்வதற்கு ஒரு இதுமேயனையே (ஏரோது) ஏற்படுத்தினார்கள். கி.பி. 70ல் ரோமர்கள் யூத மதத்தினரை எருசலேமையும், யூதேயா நாட்டையும் விட்டு விரட்டியடித்த போது இதுமேயரும் அவர்களோடு விரட்டப் பட்டனர். அது முதல் ஏதோமின் சந்ததி அழிந்து காணாமற் போய்விட்டது. ரோமர் களுடைய சிற்பக் கலை சேலாவில் (பெட்ரா) காணப்படுகிறது.

வனாந்திரமாகிய ஏதோம் தேசம்

கி.பி. 636ல் முகமதியர் அந்தப் பகுதிகளை வென்று மீதமிருந்த பட்டிணங்களையும் இடித்து, சூறையாடி, தீக்கிரையாகி சர்வ சங்காரம் செய்து விட்டுப் போயினர். அதன் பிறகு ஏதோம் ஒரு பாழான வனாந்திரமாகி ஒருவரும் குடியேறாமல் கிடக்கிறது. வால்னி என்கிற வரலாற்று ஆசிரியர் அந்த பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, தனது மூன்று நாள் பிரயாணத்தில் 30க்கும் மேற்பட்ட பட்டிணங்கள் குட்டிச்சுவராய் பாழாய், மக்கள் நடமாட்டமில்லாமல் கிடக்கின்றன என எழுதியிருக்கிறார். யோவேல் 3:19ல் (கி.மு.800) **'யூதா புத்திரரின் தேசத்திலே குற்றமில்லாத இரத்தத்தை சிந்தி அவர்களுக்கு செய்த கொடுமைகளுக்கு நிமித்தம் எகிப்து பாழாய்ப் போகும். ஏதோம் பாழான வனாந்திரமாகும்'** என்று தீர்க்கதரிசிகள் மூலம் ஆண்டவர் முன்னுரைத்தது காலக்கிரமத்தில் அப்படியே நிறைவேறியது. அதுவும் இயேசு கிறிஸ்துவினுடைய குற்றமில்லாத இரத்தத்தை சிந்துவதற்கு ஏதோமியனான (இதுமேயனான) ஏரோதும் உடந்தையாக இருந்தானே. ஆண்டவர் பார்த்துக் கொண்டு இருப்பாரா? ஏதோம் நாடே பாழாகி ஒரு வனாந்திரமாகி விட்டது.

காட்டு மிருகங்களின் புகலிடமாகியது

ஏசாயா 34:11, 13-15ல் ஏதோம் முள்ளம் பன்றிகளும், காட்டு மிருகங்களும், கழுகுகளும், வல்லூறுகளுடன், ஆந்தைகளும் குடியிருக்கும் ஸ்தலமாக மாறிப் போகும் என்று சொன்னதும் நிறைவேறியிருக்கிறது. தற்போது அந்தக் காடுகளில் சிங்கங்களும், புலிகளும் சிறுத்தைகளும் அதிகம் இருப்பதாகக்

கூறப்படுகிறது. சேலா (பெட்ராவுக்கு) போனவர்கள் அங்கே கழுகுகளும், வல்லூறுகளும், ஆந்தைகளும் மனிதரைக் கண்டவுடன் கூட்டங் கூட்டமாய் கத்திக் கொண்டு, அந்த கெபிகளுக்குள்ளிருந்து வெளியேறுவதாகவும், பாம்பு, தேள், நட்டுவாக்காலிகளுக்கு கணக்கே இல்லை என்றும் சொல்கிறார்கள். சாயங்காலமானால் ஓநாய்கள், நரிகளின் ஊளையிடுதல், காதைப் பிளக்குமாம். புர்சார்ட் என்கிற ஐரோப்பியர் தைரியமாகப் பல இடங்களை சுற்றி வந்தவர். பயம் என்பது என்ன என்பதை நான் சேலாவில் (பெட்ரா)தான் அனுபவித்தேன் என்கிறார். குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையிலும் அந்த பிரதேசத்தில் ஒரு கல்லைப் புரட்டினால் அதன் கீழே குறைந்தது இரண்டு மூன்று பெரிய நட்டுவாக்காலிகள் (அதிக விஷமுள்ளவைகள்) வெளிப்படுமாம். இந்த விஷ ஜந்துக்களுக்கும், பாம்புகளுக்கும் பயந்தே அரேபியர் எவரும் அந்த பிரதேசங்களுக்கு செல்வதே இல்லையாம்.

இவ்வண்ணமாக ஒரு காலத்தில் வர்த்தகத்திலும், செழிப்பிலும் ஓகோ என்று இருந்த ஒரு நாடு தேவன் தயக்கென்று தெரிந்து கொண்ட ஜனங்களை துன்புறுத்தியதின் நிமித்தம் அவர்களின் தேசத்தை, நகரங்களை, ஒன்றுமில்லாமல் பாழாக்கி வனாந்திரமாக்கியதோடு மட்டுமல்ல, அந்த ஜாதியே இல்லாதபடியும் ஆக்கிவிட்டார் ஆண்டவர்.

சிதிலமாகிப் போன சேயீர் மலை

சேயீர் மலைப் பிரதேசத்திற்கு ஏதோம் என்றும் (ஆதி 3:36, எண் 24-18), இதுமேயா (மாற்கு 3:8) என்றும் மறு பெயர்கள் பரிசுத்த வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுமேயா என்கிற பெயர் கிரேக்கர்களால் வழங்கப்பட்டு, புதிய ஏற்பாட்டின் காலத்தில் ரோமர்களாலும், வழங்கப்பட்டு வந்தது. சேயீர் மலை சவக்கடலுக்கு தெற்கேயுள்ள அராபா என்ற பள்ளத்தாக்கிற்கு கிழக்கே 100 மைல் நீளமும், 20 மைல் அகலமுள்ள ஒரு மலைத் தொடர். இந்தப் பிரதேசத்தில் முதன் முதலில் ஓரியர் (ஆதி 14:6) குடியிருந்தனர். இவர்கள் குகைகளில் வசித்தனர் என்று வரலாற்று

ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் ஏசாவும் அவன் சந்ததியாரும் அங்கு குடியேறி (ஆதி 36:8) ஓரியரை அழித்து (உபா 2:21) அந்தப் பிரதேசத்தை நிரப்பினர். ஏதோமைப் பற்றி முந்திய அதிகாரத்தில் பார்த்தோம்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து கானானுக்கு வரும்போது ஏதோம் நாட்டின் (சேயீர் மலைகளின்) வழியாக வரவேண்டியிருந்தது. அப்பொழுது கர்த்தர் மோசேயின் மூலமாக சேயீரில் குடியிருக்கிற ஏசாவின் புத்திரர் உங்கள் சகோதரர். ஆகையால் அவர்களோடு போர் செய்ய வேண்டாம். **'போஜன பதார்த்தங்களையும், தண்ணீரையும் அவர்கள் கையிலே பணத்துக்கு வாங்குங்கள்'** (உபா 2:4-6) என்றார். ஆனால் ஏதோமின் அரசன் இஸ்ரவேலர்களை தங்கள் நாட்டின் வழியாக போக அனுமதிக்கவில்லை. அதனால் இஸ்ரவேல் மக்கள் சேயீர் மலை (ஏதோம்) வழியாகப் போகாமல் அதைச் சுற்றி வழி விலகிப் போனார்கள்.

ரத்தப் பழிக்கு ஆளான சேயீரின் குடிகள்

இப்படியிருக்க நேபுகாத்நேச்சார் இஸ்ரவேலின் மேல் படையெடுத்தபோது ஏதோமியர் பாபிலோனியப் படைகளோடு, சேர்ந்து இஸ்ரவேலரைக் கொலை செய்து, அவர்கள் உடமைகளை கொள்ளையடித்தனர். அதைப் போலவே ரோமர்கள் படையெடுத்தபோதும், தீத்து என்ற படைத் தளபதி 20,000 இதுமேயர்களை (ஏதோமியரை) எருசலேமுக்குள் கொலை பண்ணவும், கொள்ளையடிக்கவும் அனுமதித்தான். ஏதோமியர் இஸ்ரவேல் புத்தரின் இரத்தத்தைச் சிந்தியபடியால் சேயிரின் குடிகளும் இரத்தப் பழிக்கு ஆளாகினர். ஆண்டவர் தம்முடைய தீர்க்கதரிசி எசேக்கியல் மூலமாக தனது தீர்ப்பை வழங்கினார். பார்க்க எசேக்கியல் 35:1-9, 14-15 (கி.மு. 587). அதனுடைய சாராம்சத்தை மட்டும் கீழே தருகிறேன்.

1. இஸ்ரவேல் புத்திரரின் இரத்தத்தை சிந்தியபடியால் சேயீர் இரத்தப் பழிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். (வசனம் 5,6)
2. சேயீரின் பட்டிணங்கள் வனாந்திரமாக்கப்படும். இனி அப் பட்டினங்கள் குடியேற்றப்படுவதில்லை. (வசனம் 4,9)

3. போக்குவரத்து இல்லாதபடிக்கு அங்கு சங்காரம் நடக்கும் (வசனம் 7)

4. அது பாழும் வனாந்திரமாகும். முழுவதும் பாழாகும் (வசனம் 3, 15)

சீந்துவார் இல்லா சேயீர் மலை

கி.பி. 636ம் ஆண்டு முகமதியர் இந்தப் பகுதியை வென்று பட்டிணங்களை இடித்துத் தீக்கிரையாக்கி, சர்வ சங்காரம் செய்துவிட்டுப் போய்விட்டார்கள். அதுமுதல் சேயீர் மலைப்பகுதி ஒரு பாழும் வனாந்திரமாகி விட்டது. தற்போது அந்தப் பகுதி ஜோர்டான் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கிறது. சமீபத்தில் அந்தப் பகுதியை சுற்றிப் பார்த்த வால்னி என்கிற ஒரு வரலாற்று ஆசிரியர் செய்த மூன்று நாட்கள் பயணத்தில் 30க்கும் மேற்பட்ட பட்டிணங்கள் தீக்கிரையாகி குட்டிச் சுவர்களாய், பாழாகிப் போய், மக்கள் நடமாட்டம் இன்றி கிடக்கின்றன என எழுதியிருக்கிறார். அந்தப் பகுதிகளில் எந்தவித ஒழுங்கான போக்குவரத்தும் கிடையாது என்று கூறியிருக்கிறார். இப்படி எசேக்கியல் தீர்க்கதரிசியின் மூலமாக கி.மு. 587ம் ஆண்டு ஆண்டவரால் முன்னுரைக்கப்பட்டவைகள் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே நிறைவேறியிருக்கிறது. அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும் உடன் பிறந்த சகோதரர்களாக இருந்தாலும் சரி, தேவனால் தெரிந்து கொள்ள சந்ததியை எதிர்த்தால் என்ன கதி ஆகும் என்பதற்கு ஏதோமும், சேயீர் மலையும் ஒரு சாட்சியாக நிற்கிறது.

லீபனோன் சாபலோனாக மாறியது

லீபனோன் நாடு மத்திய தரைக் கடலின் கிழக்குக் கரையில் இஸ்ரவேல் நாட்டிற்கு வடக்கேயும், சிரியா நாட்டிற்கு மேற்கேயும் உள்ள ஒரு சிறு வால் போன்ற நீண்ட பாகம். அதனுடைய தற்கால விஸ்தீரணம் 10,400 சதுர கிலோ மீட்டர் மட்டுமே. இந்த நாடு மலைப் பிரதேசம் நிறைந்த ஒரு நாடு. இங்கு கேதுரு, தேவதாரு மற்றும் பல வாசனை மரங்கள் நிறைந்த காடுகள் அடர்ந்தவை

களாக இருந்தன என்று பரிசுத்த வேதாகமத்தின் மூலம் அறிகிறோம். சாலமோன் இராஜா எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு தேவையான மரங்களை தீருவின் இராஜாவாகிய ஈராமிடத்தில் கோதுமை, வாற்கோதுமை, திராட்சை ரசம் மற்றும் எண்ணெய்யை மாற்றாக கொடுத்து பெற்றான் என 2 நாளா 2:1-18ல் பார்க்கிறோம். லீபனோனின் கேதுரு மரங்கள் 80 அடி உயரமும், 40 அடி சுற்றளவும் உள்ள பெரிய மரங்களாக வளர்ந்து பலவித நுட்பமான வேலைகளுக்கும், கெட்டியான வேலைப் பாடுகளுக்கும், உத்திரங்கள், தூண்களுக்கும், பாய் மரங்களுக் கும், பலகைகளுக்கும் பயன்பட்டன. சமீப காலங்களில் லீபனோனின் தலைநகரான பெய்ரூட் மத்திய கிழக்கு நாடுகளில் அதிக முக்கிய ஒரு நகரமாக விளங்கியது. உலகத்திலேயே மிகப் பெரிய சிவில் விமான தளங்களில் ஒன்றாகவும், பெரிய வியாபார ஸ்தலமாகவும், உல்லாசப் பயணிகள் விரும்பிப் போகும் ஒரு நகரமாகவும் இருந்தது. மத்திய கிழக்கு மாயாபுரிச் சந்தை என்று பெயர் பெற்று விளையாட்டு ஸ்தலங்களும், கேளிக்கைக் கூடங்களும் நிறைந்த ஒரு நகரமாக, மனிதர்களை நரகத்திற்கு நேராக இழுத்துச் செல்லும் ஒரு முக்கியப் பட்டிணமாக திகழ்ந்தது. இப்பேர்ப்பட்ட நாடு அந்நியர்களுக்கு தன் வாசல்களை திறந்து பாழாக்கப்படும் என்றும் அதன் விலை உயர்ந்த கேதுரு, தேவதாரு மரங்கள் எல்லாம் அழிக்கப்படும் என்றும் தமது தீர்க்கதரிசி சகரியா மூலம் அறிவித்தார்.

ஆகாமல் போன ஆகாப்

இஸ்ரவேலின் ராஜா ஆகாப் தீருவின் அரசகுமாரி எசபேலை திருமணம் செய்ததின் நிமித்தம் இஸ்ரவேல் ஜனங்களை விக்கிரஹ ஆராதனைக்கு உட்படுத்தினான்.

சகரியா 11:1-2 (கி.மு. 536) (1) **'லீபனோனே, அக்கினி உன் கேதுரு மரங்களைப் பட்சிக்கும்படி உன் வாசல்களைத் திற (2) தேவதாரு விருட்சங்களே புலம்புங்கள், கேதுரு மரங்கள் விழுந்ததே. பிரபலமானவைகள் பாழாக்கப்பட்டன.'**

அதன்படியே இந்த தேசத்தை அசீரியர், பாபிலோனியர், கிரேக்கர், செலுலுக்கியர், ரோமர், துருக்கியர், சிலுவைப் போர் வீரர், அரேபிய முஸ்லீம்கள் என பலரும் ஒருவர் மாற்றி ஒருவராக ஆண்டு வந்தனர். இப்போது லீபனான் ஒரு சுதந்திர நாடாக இருக்கிறது. அசீரிய மன்னர்கள் தங்களின் யுத்த தளவாடங்களுக்காக லீபனோன் காடுகளை அழித்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். லீபனோனின் கேதுரு, தேவதாரு மற்றும் வாசனைத் திரவிய மரங்கள், வெகு காலமாகவே அழிந்து காணாமற் போய்விட்டன. இப்பொழுது நாட்டில் ஒரு சிறு புதிய கேதுரு தோப்பும், ஆதிகாலத்து இரண்டு மூன்று கேதுரு மரங்கள் மட்டுமே காணப்படுகிறது எனக் கூறப்படுகிறது.

யுத்தகளமாகிப் போன லீபனோன்

இப்பொழுது லீபனோனில் பூர்வ குடிகள் தவிர குரூஸ் என்கிற முஸ்லீம்களும், பாலஸ்தீன அகதிகளும், சீரிய சேனைகளும், இஸ்ரேலிய சேனைகளும் நாட்டுக்குள் புகுந்ததால் அவர்களுக்குள் ஒரே குழப்பமும் யுத்தமும் ஏற்பட்டுள்ளது. முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் சண்டை, சீரியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும், பாலஸ்தீனிய அகதிகளுக்கும் இஸ்ரேலியருக்கும் யுத்தம். இப்படியாக கடந்த 30 - 35 வருடங்களாக நாடே யுத்த களமாக மாறி தாவர வர்க்கங்களே அழிக்கப்பட்டுப் போனது மட்டுமல்லாமல், தற்கால சோதோமாக இருந்த பெய்ரூட் நகரமும் அழிவுக்குள்ளாகி ஆண்டவர் சகரியாவின் மூலமாக முன்னறிவித்தது அப்படியே நிறைவேறியுள்ளது.

தீர்க்கதரிசிகளின் தீர்க்கமான தீர்ப்பு

லீபனோனைப் பற்றி இன்னும் அநேக முன்னுரைப்புக்களையும் ஆண்டவர் தன் தீர்க்கதரிசிகள் மூலமாகக் கூறியுள்ளார். அதையும் பாருங்கள்:

ஏசாயா 10:34 (கி.மு. 715): **'அவர் காட்டின் அடர்த்தியை கோடாரியினாலே வெட்டிப் போடுவார். மகத்துவமானவராலே லீபனோன் விழும்.'**

ஏசாயா 40:16 (கி.மு. 72): **'லீபனோன் எரிக்கும் விறகுக்குப் போதாது. அதிலுள்ள மிருக ஜீவன்கள் தகன பலிக்கும் போதாது.'**

எசேக்கியல் 31:15 (கி.மு. 588): **'கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்... அவன் நிமித்தம் (எகிப்தின் நிமித்தம்) லீபனோனை இருளடையப் பண்ணுவேன். வெளியின் விருட்சங்கள் எல்லாம் அவன் நிமித்தம் பட்டுப் போயின.'**

நாகூம் 1:4 (கி.மு.713) **'அவர் (கர்த்தர்) சமுத்திரத்தை அதட்டி அதை வற்றிப் போகப் பண்ணினார். லீபனோனின் செழிப்பு வாடிப் போகும்.'**

உள்நாட்டுப் போரினால் உருக்குலைந்ததே

ஏசாயா, நாகூம் இவர்களின் மூலமாக கடவுள் லீபனோனின் செழிப்பு குன்றிப் போகும் என்று கூறியிருக்கிறார். கடந்த 25 ஆண்டுகளாக அங்கு நடக்கும் உள்நாட்டுப் போரினால் 2,40,000 மக்கள் இறந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. குண்டுகளினால் சேதமடைந்த கட்டிடங்கள், குடியிருப்புகள், விவசாய பாதிப்பு இவைகளினால் ஏற்பட்ட சேதத்திற்கு கணக்கே இல்லை. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம் **'எகிப்தின் நிமித்தம் லீபனோனை இருளடையப் பண்ணினேன்'** என்று ஆண்டவர் கூறியிருக்கிறார். இது எப்படி என்று பார்ப்போம்.

கூட்டு சேர்ந்தவர்களும் கூண்டோடு அழிந்தனர்

இஸ்ரேல் தனி நாடாக உருவானது முதல் அதை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு எகிப்து அரபு நாடுகளை கூட்டுச் சேர்த்தது, அந்தக் கூட்டில் லீபனோனும் சேர்ந்தது. தேவன் தமக்கென தெரிந்து கொண்ட ஜனங்களை அழிக்க, எதிர்க்க எகிப்து முனைந்தது. அதனால் எகிப்தை ஆண்டவர் ஒன்றுமில்லாமல் பண்ணினார். இஸ்ரேலை அழிக்க துணைபோன லீபனோனையும் ஆண்டவர் அழித்தார். இஸ்ரேலுக்கும் அரபு கூட்டு நாடுகளுக்கும் இடையில் நடந்த ஐந்து யுத்தங்களில் அநேக அரேபிய முஸ்லீம்கள் அகதிகள் ஆனார்கள். அவர்கள் யோர்தான் நாட்டிற்குள் போய் குடியேறினார்கள்.

1970ம் ஆண்டு அவர்கள் யோர்தான் நாட்டிலிருந்து துரத்தப்பட்டு லீபனோனில் குடியேறினர். லீபனோன் நாடு பாலீஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமை இடமானது. அவர்கள் அங்கிருந்து கொண்டு இஸ்ரேலின் வட பகுதியாகிய கலிலேயாவைத் தாக்க, இஸ்ரேலியர் பதிலடி கொடுக்க, இதைக் காரணமாக வைத்துக் கொண்டு சீரியா ரஷ்யாவின் தளவாட உதவியுடன் லீபனோனில் நுழைந்து ஒரு கலவரத்தை உண்டு பண்ணியது. 8.11.1989 ஹிந்து நாளிதழின் கணக்குப்படி இந்த தேதியில் 30,000 சீரிய துருப்புக்கள் லீபனோனில் இருந்தனர். தினமும் குண்டு வெடித்தலும், துப்பாக்கி சண்டையும் நடந்து கொண்டே இருக்கிறது.

பூலோக நரகம் ஆனதே லீபனோன்

25 ஆண்டுகளுக்கு முன்பு லீபனோனின் ஜனத்தொகை 35 லட்சம். இந்த கலவரங்கள் ஆரம்பித்தது முதல் இறந்தவர்களின் எண்ணிக்கை 2,40,000. 1987ல் மட்டும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியேறியவர்கள் 4000. 1982-89 வரை சீப்புரு தீவில் குடியேறியவர்கள் 40,000. கடந்த நான்கு ஆண்டுகளில் பிரான்சில் குடியேறியவர்கள் 1,20,000. கலவரம் துவங்கிய பிறகு, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் 10,000 பேர் குடியேறியிருக்கின்றனர். 1989ல் அந்த நாட்டின் ஜனத் தொகை 25,00,000 என்று மதிப்பிடப்பட்டது. இது Frontline பத்திரிக்கை 14, மற்றும் 27.10.89ன் கணக்கு). 1989ல் லீபனோனில் ஜனங்கள் படும் அவஸ்தையைக் கண்டு 'அந்த நாடு ஒரு பூலோக நரகம்' ஆகிவிட்டதாக Front line இதழ் கூறுகிறது. இவ்விதமாக **'எகிப்தின் நிமித்தம் லீபனோன் இருளடைந்தது'** என்று எசேக்கியல் தீர்க்கதரிசியின் மூலமாய் ஆண்டவர் முன்னுரைத்தது இப்பொழுது நமது காலத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இஸ்ரேலுக்குப் பலியாகும் குடிமக்கள்

அமெரிக்காவின் லீபனோன் நாட்டு தூதுவரின் அறிக்கையின்படி 1988 - 89ம் வருடங்களில் ஒவ்வொரு நாளும்

சீரியா லீபனோன் நாட்டில் சராசரி 20,000 குண்டுகளை வீசி பலத்த உயிர், பொருட் சேதங்களை விளைவித்துக் கொண்டிருந்தது. இஸ்ரேல் கடந்த ஐந்து யுத்தங்களில் கொன்றதைக் காட்டிலும் அதிகமான அரேபியரை சீரியா கொன்றிருக்கிறது. லீபனோன் நாட்டையும், யோர்தானின் சில பகுதிகளையும் இஸ்ரேல் தேசத்தையும் ஜெயித்து தன் நாட்டோடு சேர்த்து **Greater Syria** என்று தன் நாட்டை உருவாக்க சீரியா உத்தேசித்திருக்கிறது. இதை விளங்கிக் கொண்டுதான் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத் சீரியாவிடம் உறவு கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தார். **(Source: Jesrish Voice - July 1989)**

இப்படியாக இஸ்ரேலுக்கு எதிராக போர் தொடுத்து எகிப்திற்கு துணைபோன லீபனோன் சாபலோனாக மாறி தினமும் அழிவைக் கண்டு கொண்டு இருக்கிறது. இன்னும் இஸ்ரேலை எதிர்த்த நாடுகள் என்ன கதியாகின என்று பார்ப்போம்.

அழிந்து போன அசீரியா தேசம்

நோவாவின் பேரன் அசூர் குடியேறிய பகுதி அசீரியா என்று அழைக்கப்பட்டது. இது டைகிரீஸ், ஜாப் என்கிற நதிகளுக்கு இடைப்பட்ட ஒரு தேசமாகும். நோவாவின் கொள்ளுப் பேரனாகிய நிம்ரோத் இந்தப் பகுதியில் கி.மு.2200ம் வருட வாக்கில் நினிவே பட்டிணத்தை டைகிரிஸ் நதியின் கிழக்குக் கரையில் கட்டினான். இந்த நகரம் கி.மு.7ம் நூற்றாண்டில் சார்கோன் என்ற மன்னனால் அசீரிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக ஆக்கப்பட்டது. அசீரிய தேசம் கி.மு. க்கு முன் 9ம் நூற்றாண்டு முதல் 7ம் நூற்றாண்டு வரை அதிக வலிமையுள்ள ஒரு சாம்ராஜ்யமாக விளங்கியது.

அசீரிய மக்கள் சிறைப்பட்டுப் போனார்கள்.

கி.மு. 745 முதல் 680 வரை ஆண்ட அரசர்கள் அதாவது புலு என்ற மறு பெயர் கொண்ட திக்லாப் பிலேசார் (கி.மு. 745 - 723), சல்மனாசார் (கி.மு. 726 - 722), சார்கோன் (கி.மு. 721 - 705),

செனகரீப் (கி.மு. 704 - 681) ஆகியோர் இஸ்ரவேல், யூதா ராஜ்ஜியங்களின் மேல் படையெடுத்து அவைகளின் ஐசுவரியத்தை எல்லாம் கொள்ளையடித்து, சிறையாக்கப்பட்டவர்களை எல்லாம் மிகக் குரூரமாக சித்திரவதை செய்தனர். சல்மனாசார் என்கிற அசீரிய மன்னன் கி.மு. 722 ல் இஸ்ரவேல் நாட்டின் தலைநகரான சமாரியாவை முற்றுகையிட்டுப் பிடித்தான் (2 ராஜா 18:9-10). அதற்கு அடுத்த ஆண்டு சார்கோன் என்ற அசீரிய மன்னன் இஸ்ரவேல் மக்களில் 27,290 பேரை சிறைப்பிடித்துக் கொண்டு போய் மேதியரின் பட்டிணங்களிலும், அசீரியாவில் கோசான் நதியோரமான ஆலோகிலும், ஆவோரிலும் குடியேற்றினான். சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டவர்களுக்குப் பதிலாக அசீரியரை சமாரியாவிலும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலேயும் குடியேற்றினான். கி.மு. 701ல் அசீரிய மன்னனாகிய செனகரீப் அநேக யூத பட்டிணங்களை அழித்து எருசலேமை முற்றுகையிட்டான் (2 ராஜா 18:13-19,37). அப்பொழுது யூதாவை ஆண்ட எசேக்கிய மன்னன் ஆண்டவரிடம் முறையிட்டான். அன்றிரவு செனகரீப்பின் பாளையத்தில் 1,85,000 பேர் கர்த்தருடைய தூதனால் சங்கீகரிக்கப்பட்டனர். இதனால் பயமடைந்த செனகரீப் திரும்பி நினிவேக்கு போய்விட்டான்.

இஸ்ரவேலரின் தங்கம், வெள்ளி தாரை வார்க்கப்பட்டது

அசீரிய மன்னனான பூல் என்ற மறு பெயர் கொண்ட திக்லாத் பிலேசாரை சமாதானப்படுத்துவதற்காக இஸ்ரவேலின் அரசனான மெனாகேம் கி.மு. 742ல் 1000 தாலந்து வெள்ளியைக் கொடுத்தான் (2 ராஜா 15:19). யூதாவின் அரசனான ஆகாஸ் கி.மு. 735ல் திக்லாத்தை திருப்திப்படுத்த தேவாலயத்திலும், தன் அரண்மனையிலும் இருந்த எல்லா வெள்ளியையும், பொன்னையும் காணிக்கையாக அனுப்பி வைத்தான் (2 ராஜா 16;8). யூதாவின் அரசனாகிய எசேக்கியா கி.மு. 701ல் அசீரியா இராஜாவாகிய செனகரீபிற்கு 300 தாலந்து வெள்ளியையும், 30 தாலந்து பொன்னையும் கப்பமாக செலுத்தினான். இதற்காக தேவாலயக் கதவுகளிலும், நிலைகளிலும் பதித்திருந்த பொன்

தகடுகளைக் கூட கழற்றிக் கொடுத்தான் (2 ராஜா 18:14-15). இவ்விதமாக இஸ்ரவேல், யூதா இராஜ்ஜியங்களின் செல்வ மெல்லாம் அசீரிய மன்னர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. அசீரிய மன்னர்கள் எல்லோருமே தேவன் ஜலப்பிரளயத்தி லிருந்து காப்பாற்றிய நோவாவின் கொள்ளுப்பேரன் பரம்பரை யில் வந்தவர்கள்தான். இந்த உலகத்தையும் அதிலுள்ள சகல ஜீவ ராசிகளையும் தேவன் ஜளப்பிரளயத்தினால் அழிக்கின்ற சமயத்தில் நோவாவையும் அவன் குடும்பத்திலுள்ள எட்டு பேரை மாத்திரம் காப்பாற்றுகிறார். **'கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும், தயவையும் காக்கின்ற உண்மையுள்ள தேவனாக இருக்கிறார்'னு உபா 7.9** கூறுகிறது. கர்த்தருக்கு பயந்து நடக்கிறவர் களுக்கு அவர் நல்லவர். அவர் தமக்கென தெரிந்து கொண்ட ஜனத்தையே துன்புறுத்தினால் அவர் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாரா? ஆண்டவர் அசீரியருக்கு விரோதமாக தமது தீர்க்கர்கள் மூலமாக தீர்ப்பை முன்னுரைத்தார்.

அசீரியா அழியும் தீர்க்கதரிசனம்

ஏசாயா 10:5,12, 16, 18, 14:25, 30:31, 31:8 (கி.மு. 713) செப்பனியா 2:13 (கி.மு. 608) மூலமாக உரைத்தார். அதன் சாராம்சத்தை மாத்திரம் கீழே தருகிறேன். (1) **ஆண்டவரின் கோபம் அசீரியர்கள் மீது தண்டாயுதமாக இறங்கும்.** (2) **அசீரிய ராஜாவினுடைய பெருமையையும், கண்களின் மேட்டிமையான பார்வையையும் விசாரிப்பார்.** 93) **பட்சிக்கும் அக்கினியாக ஒரு இளைப்பை அவர்களுக்குள்ளே அனுப்புவார்.** (4) **வனத்தின் மகிமையும், பயிர் நிலத்தின் மகிமையும் அழிந்து போகும்.** (5) **காட்டில் மீதியான மரங்கள் மிகக் குறைவாகிப் போகும்.** (6) **அசீரியன் பட்டயமில்லாத பட்டயத்தினால் அழிவான்** (7) **நினிவே பாழும் வனாந்திரமாகிப் போகும்.**

நினிவே கோட்டை நிர்மூலமாகும்

பாபிலோனிய அரசின் தளபதி நெபோபொலேசார் (கி.மு. 625 - 604) கி.மு. 625ல் அசீரியரை முறித்து பாபிலோனை

விடுவித்தான். கி.மு. 612ல் டைகிரிஸ் நதியில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து அசீரியாவின் தலைநகரான நினிவேயின் கோட்டை மதிலை இடித்துத் தள்ளி, அந்த பட்டிணத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும், மணலால் மூடி நாசமாக்கிப் போட்டது. அது முதல் அசீரியா க்ஷீணமடைந்து போயிற்று. புதிய பாபிலோனிய அரசு (கி.மு. 606 - 536) அசீரிய சாம்ராஜ்யத்தை முற்றிலுமாக அழித்து விட்டது. ஏசாயா தீர்க்கதரிசியின் கூற்றுப்படி (ஏசாயா 31:8) வீரனுடைய பட்டயமில்லாத ஒன்றினால் அதாவது ஒரு பெரிய வெள்ளத்தினால் அசீரிய ராஜ்யம் முழுவதுமாக அழிந்தது. அசீரிய சாம்ராஜ்யம் மணலால் மூடப்பட்டு அதன் செழுமை குன்றி, வனாந்திரமும், வறட்சியு மான ஒரு பாகமாக மாறிவிட்டது. 19ம் நூற்றாண்டில் தொல் பொருள் ஆராய்ச்சியாளரான சர் ஹென்றி லேயார்டு என்பவர் நினிவே பட்டிணத்தை தோண்டி எடுத்தார். கர்த்தர் தமக்கென தெரிந்து கொண்டவர்களை தொட்டால் அவர்களும், அவர்கள் பட்டிணங்களும் என்ன கதி ஆகும் என்பதற்கு சாட்சியாக அசீரி யாவும், அதன் தலைநகர் நினிவேயும் இன்றும் இருக்கின்றன.

மண்ணோடு மண்ணாகிப் போன கோரோசீன், பெத்சாயிதா, கப்பர்நகூம் பட்டிணங்கள்

மேலே கண்ட மூன்று பட்டிணங்களும் கலிலேயா கடலோரத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்தன. இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் அதிகமான பாகம் இந்தப் பிரதேசத்தில்தான் நடைபெற்றது. குருடர்களுக்கு பார்வை கிடைத்தது. குஷ்ட ரோகம் குணமாகியது. முடவர்கள் எழுந்து நடந்தார்கள். மரித்தோர் உயிரோடு எழுந்தனர். பிசாசு, பில்லி சூனியக் கட்டுகளிலிருந்து அநேகருக்கு விடுதலை கிடைத்தது. பல ஆண்டுகள் படுக்கையில் கிடந்தவர்கள் பூரண சுகம் பெற்றனர். ஆண்டவர் செய்த அற்புதங்கள், அதிசயங்களுக்கு அளவே கிடையாது. இத்தனையையும் நேரடியாகப் பார்த்த பின்பும், இப்பட்டிணத்து மக்கள் மனந்திரும்பாமற் போனார்கள்.

கிறிஸ்தவர்களால் தேசம் செழித்தது

நமது தேசத்தில் கிறிஸ்தவர்களால் ஏற்பட்டுள்ள எண்ணி மாளாத நன்மைகள், முன்னேற்றங்கள், அபிவிருத்தி, வசதிகளை எண்ணிப் பார்க்க வேண்டும். விஞ்ஞானம், மருத்துவம், கல்வி, விவசாயம், தொழில் துறை, போக்குவரத்து, மின்சாரம், பெட்ரோல், டீசல், கேஸ், விண்வெளி ஆராய்ச்சி, தகவல் தொடர்பு, ரயில், விமானம், கார் என்று நீங்கள் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் கிறிஸ்தவர்களின் பங்கு இல்லாமல் இருக்கவே இருக்காது. உடன் கட்டை ஏறுதல், ஜாதி ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாராப்புச் சேலை அணியத் த டை போன்ற எத்தனை சமூக அநீதி, கொடுமைகளுக்கு கிறிஸ்தவம் சாவு மணி அடித்திருக்கிறது. எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வில்லியம் கேரி, ஜி.யு.போப், வீரமாமுனிவர், பர்தலமேயு, மதர் திரேசா, கால்டுவெல், மாக்ஸ் முல்லர் என்று இப்படி இன்னும் எத்தனையோ பேர்கள் நமது தேச முன்னேற்றத்திற்காக உயிரைக் கொடுத்து உழைத்திருக்கிறார்களே. கிறிஸ்தவர்கள் இல்லாமல் ஒரு சிஎம்சி வேலூரில் வந்திருக்குமா? எத்தனை கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரிகள், காடுகளிலும், மலைகளிலும், ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளிலும் நாம் புறக்கணித்த நமது தேசத்து மக்களை கிறிஸ்தவம் அள்ளி எடுத்து அரவணைத்து ஆறுதல் அளிக்கிறதே.

கல்விக் கண்களை திறக்கும் கிறிஸ்தவம்

மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ், லயோலா, செயின்ட் ஜோசப், என்று எத்தனை காலேஜ்கள், எத்தனை கான்வென்ட்டுகள், எத்தனை கோடிக் கணக்கான பேர்கள் குடிப்பழக்கம், புகையிலை, புகை, போதை, சூதாட்டம், வேசித்தனம், விபச்சாரம், கொலை கொள்ளை என்று குற்ற வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி யுள்ளார்கள் எனப் பாருங்கள். எத்தனை பேருடைய கண்ணீர், துக்கம், துயரம் துடைக்கப்பட்டு இருக்கிறது. சந்தோஷம், சமாதானம், நிம்மதி இன்மை, தற்கொலை எண்ணம், பில்லி

சூனியம், செய்வினைக் கட்டுகளிலிருந்து, தீராத நோய்களி லிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது எனப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் எவரையும் மதமாற்றம் செய்யவில்லை. மனமாற்றம், பாவ வாழ்க்கை, பாவ சிந்தனையிலிருந்து ஒரு மாற்றத்தை மட்டுமே உள்ளத்தில் ஏற்படுத்துகின்றனர். அவர்களுக்கு கிடைத்த சந்தோஷம், சமாதானத்தை, சுகத்தை, பிரச்சனைக்குத் தீர்வை மற்றவர்களிடம், தேவை உள்ளவர்களிடம், இவைகள் எங்கே கிடைக்கும் என தெரியாமல் பல்வேறு இடங்களுக்கு ஓடி ஆடித் தேடித் திரியும் ஜனங்களிடம் கூறுகின்றனர். அவர்களுக்கும் இந்த சந்தோஷம் கிடைக்கட்டுமே என்கிற நல்ல எண்ணத்தில் கூறுகின்றனர். யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. வற்புறுத்த வில்லை. இதற்காக காசு பணம் எதையும் கொடுக்கவில்லை.

சுவிசேஷம் கிறிஸ்தவர்கள் மேல் விழுந்த கடமை

கிறிஸ்தவர்கள் தேசத்திற்காக, தேசத் தலைவர்களுக்காக, நாட்டு மக்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகின்றனர். **'நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள்', 'இயேசு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்படாத இடங்களில் அவரைப் பற்றி அறிவியுங்கள்', 'மனந்திரும்புகின்ற ஒரே ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமே'** என்று கூறி மனந்திரும்புதலுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேதம் கிறிஸ்தவர்களுக்கு கட்டளையிடுகிறது. அதைத்தான் அவர்கள் செய்கிறார்கள். பாவ வாழ்க்கை, பழக்க வழக்கங்களிலிருந்து ஒருவன் மனம் திருந்தினால் கிறிஸ்தவர்களுக்கு என்ன கிடைக் கிறது? யாராவது காசு பணம் கொடுக்கிறார்களா? இல்லையே!

கிறிஸ்தவம் ஒரு மதமல்ல, அது ஒரு மார்க்கம்

கிறிஸ்தவம் ஒரு மதமே அல்ல. ஒரு மார்க்கம், வழி. நம்மையெல்லாம் படைத்த அந்த பரமேஸ்வரனோடு இருந்த உறவை நம்மோட பாவங்களினால் இழந்து போயிட்டோம். அதைத் திரும்ப பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டக் கூடிய ஒரு மார்க்கந்தான் கிறிஸ்தவம். இயேசு கிறிஸ்து ஒரு மதத் தலைவர்

அல்ல. ஒரு மதத்தை ஸ்தாபிக்கணும்கிறதுக்காக அவர் மனித அவதாரம் எடுத்து வரலை. நாம செய்த பாவங்களுக்குரிய தண்டனையை தான் ஏற்றுக் கொண்டு நமக்கு பாவவிமோசனம் கொடுத்து, நாம நடக்க வேண்டிய நீதியின் பாதையை நமக்கு போதிக்கவே அவர் வந்தார். கிறிஸ்தவர்களுக்கு எதிராக எத்தனையோ- வன்முறைகள், தீவிரவாதங்கள் நடக்குது. எங்கேயாவது ஒரு ரிட்டாலியேஷன், பதிலுக்குப் பதில், பழிக்குப் பழி, வன்முறை, ஸ்டிரைக், பந்த், துப்பாக்கிச் சூடு, குண்டு வெடிப்பு என்று நடந்து இருக்கா? ஏன்? கிறிஸ்தவங்க ஆம்பிளை இல்லையா? அவர்களுக்குப் பண வசதியில்லையா? இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிக்கிறதுக்கும் தயாராக உள்ளவங்க கிறிஸ்தவங்க.

சத்துருக்களையும் சிநேகிக்கும் கிறிஸ்தவம்

ஜனங்கள் கூடுகிற ஒரு இடத்தில் ரெண்டு வெடிகுண்டை சைலண்டா வச்சுட்டு வர எவ்வளவு நேரம் ஆகும்? ஒரு ரயிலைக் கவிழ்க்க, ஒரு பஸ்ஸை எரிக்க, ஒரு இந்துக் கோயிலை தகர்க்க எவ்வளவு டைம் ஆகும்? ஏன் எந்த கிறிஸ்தவனும் அப்படி செய்யாம, அடிச்சாலும், உதைச்சாலும், எதிர்த்தாலும், தேவாலயத்தில் கலாட்டா பண்ணினாலும், அமைதியாக இருக்கின்றனரே. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அவரவர் விருப்பப்படி எந்த தெய்வத்தையும் ஆராதிக்க அனுமதி கொடுத்து இருக்கின்றதையும் மீறி சில தீவிரவாத அமைப்புகள் தீமை செய்தபோதும் எதிர்த்து எதையும் செய்யாமல் ஏன் இருக்கின்றனர்? ஏன் பொறுமையோடு சகித்துக் கொண்டு அமைதியாக இருக்கின்றனர்? அப்படித்தான் இருக்கணும்னு பைபிள் கூறுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னதை அப்படியே அட்சரம் பிசகாமல் கடைப்பிடிக்கிறதுனாலதான் எந்த வன்முறையும் தீவிரவாமும் இல்லை. கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களை அவர்கள் எதுவும் செய்ய மாட்டார்கள்.

கிறிஸ்தவத்தை தொட்டால் கர்த்தர் காப்பாத்துவார்

ஆனா அதைப் பார்த்துக்கிட்டு ஆண்டவர் சும்மா இருப்பாரா? அவர் ஜீவனுள்ள ஒரு தேவனாச்சே. அவரை நம்புகிறவர்களை,

அவரோட பிள்ளைகளை, அவரை ஏற்றுக் கொண்ட பிள்ளைகளைத் தொட்டால் அவர் களம் இறங்குவார். எதிர்ப்பவர்களை மாத்திரமல்ல, அவர்கள் பரம்பரை, அவர்கள் நாடு, நகரம், தேசம், எல்லாவற்றையும் ஈவு இரக்கமின்றி அழிப்பார். அதைத்தான் நாம் இப்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம். எத்தனை நாடு, நகரங்கள், ஆயிரக்கணக்கான மக்கள் அழிந்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். எழுதியிருப்பது எதுவும் கற்பனைக் கதையல்ல. இது சரித்திரம், வரலாறு. இன்றும் அந்த இடிபாடுகளை, அழிவுச் சின்னங்களைக் காணலாம்.

புறக்கணித்தால் புண்ணாகிப் போவாய்!

கிறிஸ்தவத்தை எதிர்த்தால் மட்டுமல்ல, கிறிஸ்தவர்களை துன்புறுத்தினால் மட்டுமல்ல, அவர்கள் கூறும் சத்தியத்தைக் கேட்க மனதில்லாமல், பாவ வாழ்க்கையை விட்டு, மனந்திரும்பாமல், கிறிஸ்தவத்தால் தேசத்தில் ஏற்பட்டுள்ள நன்மைகளையும், முன்னேற்றங்களையும், கண்டு கொள்ளாமல் புறக்கணித்தாலே என்ன கதி ஆகும் என்பதற்கு கோரோசின், பெத்சாயிதா, கப்பர் நகூம் பட்டிணங்கள் சாட்சியாக நிற்கின்றன. இந்தப் பகுதிகளில்தான் இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியம் அதிகமாக இருந்தது. அவர் செய்த எண்ணி மாளாத அற்புதங்களை இப்பட்டிணத்தார்கள் கண்கூடாகக் கண்டனர். இருந்தாலும் அவரைப் புறக்கணித்தனர். அதனால் என்ன ஆயிற்று என்று பாருங்கள். ஆண்டவர் தமது தீர்க்கதரிசிகள் மூலமாக தமது தீர்ப்பை வழங்கினார்.

தீர்க்கதரிசிகளின் மூலம் தீர்ப்பு

மத்தேயு 11:21-24 (கி.பி. 31) (21) **'கோரோசினே உனக்கு ஐயோ. பெத்சாயிதாயே உனக்கு ஐயோ. உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும், சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால் அப்பொழுதே இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். (22) நியாயத் தீர்ப்பு நாளிலே உங்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், தீருவுக்கும், சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன். (23) வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர் நகூமே, நீ பாதாள பரியந்தம்**

தாழ்த்தப்படுவாய். உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால் அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். (24) நியாயத் தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாய் இருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

ஐயோவாகிப் போன பட்டிணங்கள்

இயேசு கிறிஸ்து இந்தப் பட்டிணங்கள் அழிந்து போகும் என்று சொல்லா விட்டாலும், அண்ட சராசரங்களையும் படைத்த அந்த சர்வேஷ்வரன் 'ஐயோ' என்று சொன்ன ஒரு வார்த்தையே அவைகள் ஒழியும் என்கிற பொருளைத் தருகிறது. ஆங்கில வேதாகமத்தில் **woe unto thee** என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அதனை 'நீ நாசமாய் போ' என்று மொழிபெயர்க்கலாம். கி.பி. 400ம் ஆண்டு வாக்கில் நிகழ்ந்த ஒரு பூகம்பத்தில் இந்தப் பட்டிணங்கள் அழிந்து போனதாகக் கூறப்படுகிறது. காலப்போக்கில் அவைகள் மண்மேடுகளாக காட்சியளிக்கின்றன. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த மூன்று இடங்களையும் தோண்டி அழிந்து போன ஜெப ஆலயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆண்டவர் சொன்ன தீர்ப்பு அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறி அந்த மூன்று பட்டிணங்களுமே இன்று அழிந்து போய் விட்டன.

அஸ்கலோன் பட்டிணம் அழிந்து போகும்

பெலிஸ்தியர் குடியேறிய பட்டிணங்களில் ஒன்று அஸ்கலோன். இது பெலிஸ்தியரின் முக்கியமான ஐந்து பட்டிணங்களில் ஒன்றாக இருந்து கி.மு. 2000 ஆண்டு வாக்கில் அது ஒரு கானானியப் பட்டிணமாக மாறியது. கி.மு.1195ம் வருடம் போல அங்கே குடியேறிய பெலிஸ்தியர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தனர். பார்த்தார் ஆண்டவர். தமது நான்கு தீர்க்கதரிசிகளான ஆமோஸ், செப்பனியா, எரேமியா, சகரியா மூலம் அஸ்கலோன் பட்டிணம் மட்டுமல்ல, பெலிஸ்தியரின் ஐந்து பட்டிணங்களான எக்ரோன், அஸ்தோத், காசா மற்றும் காத்சா பட்டிணங்கள் என்ன கதி

ஆகும் என்று முன்னுரைத்தார். அவைகளை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

எரேமியா 47:5 (கி.மு.607): **'காத்சா மொட்டையடிக்கப்படும். அவர்களுடைய பள்ளத்தாக்கிலே மீதியாகிய அஸ்கலோன் சங்காரமாகும். நீ எந்த மட்டும்தான் உன்னைக் கீறிக் கொள்வாய்'.**

ஆமோஸ் 1:8 (கி.மு. 787): **'நான் குடிகளை ஆஸ்தோத்திலும் செங்கோல் செலுத்துகிறவனை அஸ்கலோனிலும் இராதபடிக்கு சங்காரம் பண்ணி, பெலிஸ்தியரில் மீதியானவர்கள் அழியும்படி என் கையை எக்ரோனுக்கு விரோதமாகத் திருப்புவேன்'** என்று கர்த்தராகிய ஆண்டவர் கூறுகிறார்!

செப்பனியா 2:46-7 (கி.மு. 630): **'காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும்..' (6) 'சமுத்திரக்கரை தேசம் மேய்ப்பர் தங்கும் குடில்களும் ஆட்டுத் தோழங்களுமாகும். (7) அந்த தேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும். அவர்கள் அவ்விடங்களில் மந்தை மேய்ப்பார்கள். அஸ்கலோன் வீடுகளிலே சாயங்காலத்திலே படுத்துக் கொள்வார்கள். அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்!'**

சகரியா 9:5 (கி.மு. 487) **'அஸ்கலோன் அதை (தீருவைக்) கண்டு பயப்படும். காத்சாவும் அதைக் கண்டு துக்கிக்கும். எக்ரோனும் தன்னம்பிக்கை அற்றுப் போனபடியால் மிகவும் பிரலாபிக்கும். காத்சாவில் ராஜா அழிந்து போவான். அஸ்கலோன் குடியற்று இருக்கும்.'**

ஆடு மேய்க்கும் இடமாக அஸ்கலோன் ஆனதே

ரோமப் பேரரசின் காலமெல்லாம் (அதாவது கி.பி. 634) வரை அஸ்கலோன் ஒரு நல்ல துறைமுகப் பட்டிணமாக இருந்தது. அதன் பின்னர் மாமலுக்கிய சுல்த்தான் பில்பார்ஸ் கி.பி. 1270ல் அந்தப் பட்டிணத்தை இடித்து அதன் கற்களையெல்லாம் துறைமுகத்திற்குள் எறிந்து அதைப் பயன்படுத்த முடியாதபடி தூர்த்துப் போட்டான். பட்டிணம் நாசமானபடியாலும் சுற்றுப்புறம் செழிப்பான பூமியாக இருந்தபடியாலும், சுற்று வட்டாரக் குடிகள் அதைத் தங்கள் ஆடுகளை மேய்க்கும் இடமாக பயன்படுத்தினர். 17ம் நூற்றாண்டிலும் அங்கே ஒரு துருக்கிப் படை மட்டும்

இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அதன் பிறகு அஸ்கலோன் பட்டிணம் ஒரு குடியற்ற குட்டிச்சுவர்களான மண் மேடுகளாக ஆகிப் போயிற்று. என்றாலும் இஸ்ரேல் நாடு 1948ல் பிரகடனப்படுத்தப்பட்ட பொழுது காசா பகுதி (அஸ்கலோன் உட்பட) எகிப்தியரின் வசமாயிற்று. 1967ம் ஆண்டு எகிப்திற்கும் இஸ்ரவேல் தேசத்திற்கும் நடந்த 6 நாள் போரில் இந்தப் பகுதியை இஸ்ரேல் வென்று தன் வசத்தில் வைத்துக் கொண்டது. இவ்விதமாக செப்பனியா தீர்க்கதரிசி 2:6-7ல் கூறியபடி அந்தப் பகுதி யூதா வம்சத்தாரின் மீதியானவர்களின் வசமாயிற்று. அதன்பின் இஸ்ரேல் இந்தப் பட்டிணத்தை ஒரு பூங்காவனப் பட்டிணமாக நிர்மாணித்து புதுப்புதுக் கட்டிங்களைக் கட்டி அதைச் சீர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேலர்களுக்கு தொந்தரவு கொடுத்ததின் நிமித்தம் அஸ்கலோன் பட்டிணம் அழிக்கப்பட்டு, அதன் தலைவன் கொல்லப்பட்டு, சில காலம் அது பாழும் தரிசாகக் கிடந்து, இறுதியில் இஸ்ரவேலரின் கையில் வந்து அவர்களால் கையாளப்படுகிறது. இவ்விதமாக ஆண்டவர் சொன்ன தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேறியிருக்கிறது.

எக்ரோன் எதுவுமில்லாமற் போகும்

பெலிஸ்தியரின் ஐந்து முக்கியப் பட்டிணங்களில் எக்ரோனும் ஒன்று. பெலிஸ்தியர் இஸ்ரவேலுக்கு முள்ளாக இருந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். ஆகவே பெலிஸ்தருக்கு ஆண்டவர் தண்டனை வழங்கியபோது அது எக்ரோனையும் பாதித்தது. ஆமோஸ், செப்பனியா, சகரியா ஆகிய மூன்று தீர்க்க தரிசிகள் மூலமாக ஆமோஸ் 1:8 (கி.மு. 707)லிலும், செப்பனியா 2:4லிலும், சகரியா 9:5லிலும் ஆண்டவர் எக்ரோனின் முடிவை அறிவித்தார்.

இந்த தீர்க்கதரிசன வசனங்கள் ஏற்கனவே முந்திய அதிகாரத்தில் (அஸ்கலோன் பற்றிய தீர்க்கதரிசனத்தில்) கூறப்பட்டு இருப்பதால் அதை மீண்டுமாய் எழுதாமல் எக்ரோன் எப்படி அழிந்தது என்று மாத்திரம் எழுதுகிறேன்.

கி.பி. 1270ல் சுல்த்தான் பிர்பார்ஸ் பாலஸ்தீனத்தை ஜெயித்து பெலிஸ்தியரின் நாட்டையும் நகரங்களையும் அழித்துப் போட்டான். அதில் எக்ரோனும் அழிந்தது. இன்று அது வெறும் மணல் மேடாகத்தான் காட்சியளிக்கிறது. கர்த்தர் 2000 வருஷங்களுக்கு முன்பு சொன்னது அப்படியே நிறைவேறி யிருக்கிறது.

காசா கதிகலங்கி காணாமற் போகும்

காசா பட்டிணம் உலகத்தின் பழங்காலப் பட்டிணங்களில் ஒன்று. ஆபிரகாமின் காலத்திற்கு முன்னதாகவே இந்தப் பட்டிணம் ஆவியர் என்கிற இனத்தாரால் நிரம்பியிருந்தது. காசாவின் எபிரேயப் பெயர் ஆசா (உபா 2:22, 1 ராஜா 4: 24). கிறிஸ்துவுக்கு முன் 1195ம் ஆண்டு வாக்கில் பெலிஸ்தியர் அங்கு வாழ்ந்த ஆவியரை விரட்டி விட்டு காசாவிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் குடியேறினர். காசா பெலிஸ்தியரின் தலைநகராக விளங்கியது. நியாயாதிபதிகளின் காலத்தில் சிம்சோன் அந்தப் பட்டிணத்தின் வாசற் கதவுகளை அதன் நிலைகளோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு பக்கத்து மலை உச்சிக்குக் கொண்டு சென்றான் (நியாயா 16;1-3). பெலிஸ்தியர் என்றவுடன் நமக்கு தாவீதும் கோலியாத்தும் நினைவுக்கு வராமல் போகாது. இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தில் குடியேறிய பின்பு பெலிஸ்தியர் அவர்களுக்கு அதிகமான துன்பங்களை கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

இஸ்ரவேலருடைய அறுவடைக் காலங்களில் பெலிஸ்தியர் வந்து இஸ்ரவேலரின் தானியங்களை அறுத்துக் கொண்டு போய்விடுவார்கள். தாவீது அரசனான போது பெலிஸ்தியரை வென்று தனது நாட்டை விரிவுபடுத்தினான். சாலமோன் ராஜா நாட்களிலும் இஸ்ரவேலருக்கு பெலிஸ்தியரால் ஒரு தொந்தரவும் இல்லை. ஆனால் சாலமோனுக்குப் பிறகு அவன் அரசு இரண்டாகப் பிரிந்தது. பெலிஸ்தியர் திரும்பவும் இஸ்ரவேல் / யூதா அரசுக்கும், இனத்தாருக்கும் துன்பம் கொடுக்க ஆரம்பித்தனர்.

பெலிஸ்தியர் இஸ்ரேவலருக்கு இழைத்த கொடுமைகளின் நிமித்தம் ஆண்டவர் அந்த இனத்திற்கும், அதன் பட்டிணங் களுக்கும் எதிராக தீர்ப்பைக் கூறினார். அவைகளில் முதலில் பெலிஸ்தியரைக் குறித்து பார்த்துவிட்டு, அதன்பிறகு காசா பட்டிணத்தின் அழிவைக் குறித்துப் பார்ப்போம்.

பெலிஸ்தியர் பேரழிவைக் காண்பார்கள்

ஆண்டவர் தமது தீர்க்கதரிசிகளாகிய ஏசாயாவின் மூலம் ஏசாயா 14:31 (கி.மு. 712)லிலும், செப்பனியா மூலம் 2:5-7 (கி.மு. 670)லிலும், எரேமியா மூலம் 47:4 (கி.மு.60)லிலும், எசேக்கியல் மூலம் 25:15-17 (கி.மு.590)லிலும், ஒபதியா மூலம் 1:19 (கி.மு. 587)லிலும், சகரியா மூலம் 9:6 (கி.மு. 487)லிலும் தமது தீர்ப்பை அளித்தார். ஏசாயா தீர்க்கதரிசி பெலிஸ்திய தேசம் முழுவதும் கரைந்து போகும் என்றார். செப்பனியா உன் பட்டிணங்களை குடியிராதபடிக்கு அழிப்பேன் என்றார். எரேமியா மீதியாகிய பெலிஸ்தியரையும் கர்த்தர் பாழாக்குவார் என்றார். எசேக்கியலும் பெலிஸ்தியரில் மீதியானவர்களை அழித்து அவர்களையும் கர்த்தர் பழிவாங்குவார் என்றார். ஒபதியா சமனான தேசத்தார் பெலிஸ்தியரின் தேசத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றார். சகரியா கர்த்தர் பெலிஸ்தியரின் கர்வத்தை அழிப்பார் என்றார். ஆக எல்லா தீர்க்கதரிசிகளின் மூலமாகவும் கர்த்தர் பெலிஸ்தியர் ஜாதியை அழித்துப் போடுவேன் என்று உரைத்தார். அது எப்படி, எப்பொழுது நிறைவேறியது எனப் பாருங்கள்.

பெலிஸ்தியர் ஜாதியே இல்லாமல் போகும்

கி.மு. 586ம் ஆண்டு பாபிலோனிய அரசனாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் மேல் படையெடுத்து வந்தபோது பெலிஸ்திய பட்டிணங்களையும் கொள்ளையடித்து, மக்களையும் கொன்று போட்டான். கி.மு. 8, 7ம் நூற்றாண்டுகளில் எகிப்தியரும், அசீரியரும் பெலிஸ்தியர் மேல் படையெடுத்து அழிவை உண்டாக்கினர். எகிப்தியருடைய இராணுவ முகாம்கள் பெலிஸ்திய நாட்டிற்குள் இருந்ததை அண்மைக் காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டிக் கண்டுபிடித் துள்ளனர். என்றாலும் கி.பி. 333ல் மகா அலெக்ஸாண்டர் இந்தப்

பகுதி மீது படையெடுத்து வென்று சேதமுண்டாக்கினான். என்றாலும் கி.பி. 1270 வரை பெலிஸ்தியர் ஒரு சிறு ஜாதியாக இருந்ததாகத் தெரிகிறது. கி.பி. 1270ல் சுல்தான் பிர்பார்ஸ் என்பவன் அந்தப் பகுதி முழுவதையும் வென்று, மக்களை பட்டயத்திற்கு இரையாக்கினான். அது முதல் பெலிஸ்திய ஜாதி அழிந்து ஒன்றுமில்லாமல் போய்விட்டது. (The Philistines have been destroyed so completely that there is not a single philistine living anywhere in the world today - George Davis - Bible Prophecies fulfilled today). உலகம் முழுவதிலும் இப்பொழுது ஒரு பெலிஸ்தியன் கூட இல்லாமல் யாவரும் அழிக்கப்பட்டு போயினர் என்றாலும், அப்பகுதியின் ஐந்து பட்டிணங்களும் அழிந்து மண்மேடாகப் போனாலும், அதன் செழுமை மாறவில்லை.

பெலிஸ்திய பட்டிணம் மீண்டும் இஸ்ரவேலர் வசமாகும்

கி.பி. 1967ம் வருடம் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் நடந்த 6 நாள் யுத்தத்தில் இஸ்ரேல் இந்தப் பகுதியைக் கைப்பற்றியதால் கி.மு. 630ல் செப்பனியாவின் மூலம் ஆண்டவர் கூறியது (செப் 2:7) **'அந்ததேசம் யூதா வம்சத்தாரில் மீதியானவர்களின் வசமாகும்'** என்ற வாக்கு நிறைவேறியது. இப்பொழுது பாலஸ்தீனியர் என்று கூறிக் கொண்டு காசா பகுதியையும், யூதேயா சமாரியா (மேற்கு கரை) பகுதியையும் சொந்தம் கொண்டாடும் அரேபிய முஸ்லீம்களுக்கும் பெலிஸ்தியருக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. அவர்கள் பெடாயின் கூட்டத்தைச் சேர்ந்த நாடோடி அரபு முஸ்லிம்கள் என்று சொல்லலாம். கி.மு.1882ம் ஆண்டுக்குப் பிறகு யூதர்கள் ரஷ்யாவிலிருந்து வந்து நாட்டை வளப்படுத்தி நிரந்தர குடியேற்றங்களை ஆரம்பித்த பின்பு இவர்களும் நிரந்தரக் குடிகளாக யூதரோடு சேர்ந்து வாழ்ந்தனர்.

பாலஸ்தீனருக்கும் பெலிஸ்தியருக்கும் சம்பந்தமில்லை

கி.பி. 1948ம் ஆண்டு இஸ்ரேல் நாடு என்று யூதரால் பிரகடனப்படுத்தும் வரை இந்தப் பிரதேசம் பாலஸ்தீனா என்று அழைக்கப்பட்டது. யூதர்கள் வெளியிட்டு வந்த நாளிதழ்

'பாலஸ்தீன போஸ்ட்' என்றுதான் வெளிவந்தது. இஸ்ரேல் என்று தங்கள் நாட்டிற்கு யூதர்கள் பெயரிட்ட போது அந்த நாளிதழின் பெயரை 'எருசலேம் போஸ்ட்' என்று மாற்றினர். அதன்பிறகு அங்கு வசித்து வந்த முஸ்லீம்கள் தங்களைப் பாலஸ்தீனர்கள் என்று அழைத்துக் கொண்டு யூதருக்கு விரோதமான போக்கைக் கடைபிடிக்கத் தொடங்கினர். ஆகவே பாலஸ்தீனருக்கும் பெலிஸ்தியருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

சங்காரம் செய்யும் சங்கரனாக கர்த்தர் இன்றும் ஜீவிக்கிறார்

பெலிஸ்தியர் என்று பெயரைச் சொல்வதற்குக் கூட ஒருவரும் இல்லாமல் ஆண்டவர் அந்த இனத்தையே அழித்தார். தேவன் தமக்கென்று தெரிந்து கொண்ட ஜனங்களை துன்புறுத்தினால் என்ன ஆகும் என்பதற்கு பெலிஸ்தியரின் அழிவும் ஒரு சாட்சியாக இருக்கிறது. 3000 ஆண்டுகளுக்கு முன்பாக மாத்திரமல்ல, கர்த்தர் இன்றும் ஜீவிக்கிறார். அவர் ஜீவனுள்ள தேவன். அன்றும், இன்றும், என்றும் மாறாத தேவனாக, அதே வல்லமையுள்ள, எரிச்சலுள்ள தேவனாக, சங்காரம் செய்யும் சங்கரனாக இருக்கிறார். அவர் பட்சிக்கின்ற அக்கினியாக இருக்கிறார் என்பதை நாம் மறக்கக் கூடாது. அவரோடேயோ, அவரின் பிள்ளைகளோடயோ, மோதினால் என்ன கதி ஆகும் என்பதை பரிசுத்த வேதாகமம் ஆதாரத்துடன் கூறுகிறது.

காசா காணாமற் போகும்

பெலியஸ்தியரை மட்டுமல்ல, அவர்களின் தலைநகராக இருந்த காசா பட்டிணத்தையும் அழிப்பேன் என ஆண்டவர் தமது தீர்க்கதரிசியான ஆமோஸ் மூலமும் (1:6-7) (கி.மு. 787)லிலும், எரேமியா மூலமும் 47:1,5 (கி.மு. 607)லிலும், செப்பனியா மூலம் 2:4 (கி.மு. 630)லிலும், சகரியா மூலமும் 9:5 (கி.மு. 487)லிலும் அறிவித்தார். அதன் சாராம்சம் - காசா பட்டிணம் தீக்கிரையாக்கப்பட்டு, குடியற்று மொட்டையடிக்கப்பட்ட தலையைப் போலாகும். அதன் அரசன் அழிந்து போவான்.

இப்பொழுதும் காசா என்று ஒரு பட்டிணம் இருக்கிறது. அதனால் காசா பட்டிணத்தை குறித்த தீர்க்கதரிசனம் பொய் என்று

சிலர் எண்ணி வந்தனர். ஆனால் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்களின் முயற்சியால் பழைய காசா பட்டிணம் இரண்டு மைல் தூரத்தில் சமுத்திரக் கரை ஓரத்தில் இடிபட்டு மணல் மேடுகளால் மூடப்பட்டு மொட்டையடிக்கப்பட்ட தலையைப் போல் புல் பூண்டுகள் கூட இல்லாமல் மொட்டையாகக் காட்சியளிக்கிறது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இருக்கிற காசா பழைய காசா பட்டிணத்தின் இடிபாடுகளுக்கு மேல் கட்டப்படவில்லை. கி.பி. 1270ல் பிர்பார்ஸ் என்ற முகமதிய சுல்தானால் அது தீக்கிரையாக்கப்பட்டு அதன் அரசனும் கொல்லப்பட்டான். இவ்விதமாகக் காசாவைப் பற்றி ஆண்டவர் நான்கு தீர்க்கதரிசிகளின் மூலம் 300 ஆண்டுகள் இடைவெளியில் முன்னறிவித்தார். 1700 ஆண்டுகளுக்குப் பிறகு அது அப்படியே தவறாமல் நிறைவேறியிருக்கிறது.

காத் நகரம் காணாமற் போயிற்று

காசா, காத், அஸ்கலோன், அஸ்தோத், எக்ரோன் என்ற ஐந்து முக்கியமான பட்டிணங்கள் பெலிஸ்தியரின் பட்டிணங்களாக இருந்தன. காத் நகரம் என்ற உடனேயே நமக்கு கோலியாத்தின் நினைவுதான் வரும். இந்த நகர்தான் இஸ்ரவேலருடைய நாட்டிற்கு வெகு அருகாமையில் இருந்த ஒரு பெலிஸ்திய நகரம். அஸ்தோத்திற்கு கிழக்கே 10 மைல் தூரத்திலும், எக்ரோனுக்கு தென்கிழக்கே 10 மைல் தூரத்திலும் இருந்தது.

ஆமோஸ் தீர்க்கதரிசி இந்த நகரத்தின் அழிவைக் குறித்து, ஜாடையாக ஆமோஸ் 6:2, 7ல் குறிப்பிட்டுள்ளார் (2) **'நீங்கள் கல்மனே மட்டும் சென்று, அவ்விடத்திலிருந்து ஆமோத் என்னும் பெரிய பட்டிணத்திற்குப் போய், பெலிஸ்தியருடைய காத் பட்டிணத் திற்கு இறங்கி அவைகள் இந்த ராஜ்ஜியங்களைப் பார்க்கிலும், நல்லவை களோ என்றும், அவைகளின் எல்லைகள் உங்கள் எல்லைகளைப் பார்க்கிலும் விஸ்தாரமானவைகளோ என்றும் பாருங்கள்.'** (7) **'ஆகையால் அவர்கள் சிறையிருப்பிற்குப் போகிறவர்களின் முன்னிலையில் போவார்கள். இப்படியே செல்லமாய் சயனித்தவர்களின் விருந்து கொண்டாடல் நின்று போகும்.'**

நிறைவேறுதல்: சிலுவை யுத்த வீரர்கள் இந்த நகரத்திலும் தங்கி அரேபியருக்கு விரோதமாக யுத்தம் பண்ணியதாக சரித்திரம் கூறுகிறது. ஆனால் என்ன காரணத்தினாலோ அதன் பிறகு அந்த நகரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது. பீட் ஜிப்ரின் என்ற நகருக்கு மேற்கே ஆறு மைல் தூரத்தில் உள்ள அராக் - எல். மொன்ஷியா (Arag - el - Meashiyeh) (Tell - ES - Safiyeh) என்ற புதைபொருள் ஆராய்ச்சி ஸ்தலம்) என்ற இடம் காத் நகர் இருந்த இடமாக இருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த நூற்றாண்டில் காத் என்கிற பெயரில் அந்தப் பகுதியில் ஒரு யூத நகரம் கட்டப்பட்டிருக்கிறது. பெலிஸ்தியரின் காத் பட்டிணத்திற்கும் இந்தப் பட்டிணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவ்விதமாக கர்த்தர் ஆமோசின் மூலமாக கூறியது அப்படியே நிறைவேறியிருக்கிறது.

அஸ்தோத் அழிந்து போகும்

பெலிஸ்தியரின் ஐந்து முக்கிய நகரங்களில் அஸ்தோத்தும் ஒன்று. சாமுவேலின் காலம் முதல் (சுமார் கி.மு. 1020) யூதர்கள் பாபிலோன் சிறையிலிருப்பிலிருந்து திரும்பி வரும் வரை (கி.மு. 536) கூட அஸ்தோத் பெலிஸ்தியரின் தலைநகராக இருந்தது. அஸ்தோத் அஸ்கலோனுக்கும் எக்ரோனுக்கும் நடுவில் இருந்த ஒரு உள்நாட்டு நகரம். சமுத்திரக் கரையிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து எபெநேசர் என்கிற இடத்தில் இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் நடந்த யுத்தத்தில் பெலிஸ்தியர் உடன்படிக்கை பெட்டியை பிடித்து அஸ்தோத்தின் தாகோனுடைய கோயிலில் முதலாவது கொண்டு போய் வைத்ததாக பரிசுத்த வேதாகமத்தில் (1 சாமு 5:1-8) படிக்கிறோம்.

பெலிஸ்தியர் இஸ்ரவேலருக்கு முள்ளாக இருந்தார்கள். ஆகையினால் ஆண்டவர் செப்பனியா, ஆமோஸ், சகரியா முதலிய தீர்க்கதரிசிகளின் மூலமாக தமது தீர்ப்பைக் கூறினார். முன்னுரைப்பு - ஆமோஸ் 1:8 (கி.மு. 787) **'நான் குடிகளை அஸ்தோத்திலும் செங்கோல் செலுத்துகிறவனை அஸ்லோனிலும் இராதபடிக்கு சங்காரம் பண்ணி, பெலிஸ்தியரில் மீதியானவர்கள்**

அழியும்படிக்கு என் கையை எக்ரோனுக்கு விரோதமாக திருப்புவேன்' என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

'செப்பனியா 2:4 (கி.மு. 630) **'காத்சா குடியற்று, அஸ்கலோன் பாழாகும். அஸ்தோத்தைப் பட்டப் பகலிலே பறக்கடிப்பார்கள்..'** சகரியா 9:6 (கி.மு. 483): **'அஸ்தோத்தில் வேசிப் பிள்ளைகள் வாசம் பண்ணுவார்கள். நான் பெலிஸ்தியரின் கர்வத்தை அழிப்பேன்'.**

அஸ்தோத்திற்கு ஐயோ

அஸ்தோத் நகரம் க்ஷீண தசை அடையும் என்று ஆண்டவர் திட்டவட்டமாக கூறியிருக்கிறார். மக்கபேயரின் காலத்தில் (கி.மு. 165 - கி.மு. 68) அஸ்தோத் யூதரால் பிடிக்கப்பட்டு அதன் சிலைகள் எல்லாம் அகற்றப்பட்டு, அது ஒரு யூத நகரமாக ஆக்கப்பட்டது. ரோமர்கள் காலத்தில் அஸ்தோத் புதுப்பிக்கப் பட்டு கி.பி. 4ம் நூற்றாண்டில் ஒரு கிறிஸ்தவ பேராயத்தின் தலைமையகமாகத் திகழ்ந்தது. ஆனால் அதன் பின்பு கி.பி. 636 - 1072ல் அரபிய முஸ்லிம்களின் படையெடுப்பில் அந்த நகரம் அழிக்கப்பட்டு அதன் அரண்மனைகளும் இடிக்கப்பட்டன. கி.பி. 1956ம் ஆண்டு அஸ்தோத் ஒரு யூத நகரமாக சமுத்திரக் கரையோரத்தில் கட்டப்பட்டு இன்று அது ஒரு தொழிற் பேட்டையாகவும், துறைமுகமாகவும் முன்னேறி வருகிறது. இந்த புது நகரம் பழைய நகரத்தின் மேல் கட்டப்படவில்லை. அஸ்தோத்தின் அரண்மனையின் இடிபாடுகளை இன்னும் காணலாம். இவ்விதமாக ஆண்டவர் தமது தீர்க்கதரிசிகளின் மூலமாக அஸ்தோத் நகரைக் குறித்துக் கூறியது அப்படியே நிறைவேறியிருக்கிறது.

அமலேக்கியர் அடியோடு அழிவார்கள்

இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து கானான் தேசத்துக்கு திரும்பி வரும்போது கானானின் தென்பகுதியிலும், சீனாய் தீபகற்பத்திலும், சவக் கடலுக்கு தென் மேற்கில் எகிப்தின் எல்லை மட்டும் அமலேக்கிய ஜாதியார் வாழ்ந்து வந்தனர். ஆபிரகாமின் காலத்திலேயும் அமலேக்கியர் அந்தப் பகுதியில் வாழ்ந்து வந்ததாக ஆதி 14:1ல் காண்கிறோம். இஸ்ரவேலரின்

பிரயாணத்தில் முதன் முதலில் இஸ்ரவேலரோடு சண்டையிட்டு அவர்கள் கானானுக்கு போகாதபடி ரெவிதீமிலே முதல் முட்டுக்கட்டை போட்டவர்கள் இவர்களே. அமலேக்கியர் தனியாகவும், மற்ற சாதிகளோடு கூட்டமாகவும் சேர்ந்தும் இஸ்ரவேல் மக்களை எதிர்த்து காலங் காலமாக சண்டை போட்டு வந்தனர். ஆகவே ஆண்டவருடைய கோபம் அவர்கள் மேல் பற்றி எரிந்தது. ஆண்டவர் மோசேயின் மூலமாக அவர்கள் முடிவை அறிவித்தார்.

கர்த்தரின் கடும் கோபம்

யாத்திராகமம் 17:14 (கி.மு. 1491): **'பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி, இதை நினைவுகூறும் பொருட்டு நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இல்லாதபடிக்கு நாசம் பண்ணுவேன்'** என்றார்.

மோவாபின் அரசனாகிய பாலாக்கு பிலேயாமிடம் இஸ்ரவேலரைச் சபிக்கும்படி கேட்டுக் கொண்டபோது கடவுள் பிலேயாமுக்கு பல சாதிகளைப் பற்றி அறிவித்தார். அவைகளில் அமலோக்கியரைப் பற்றி சொன்னது: எண்ணாகமம் 24:20 (கி.மு. 1452): **'அமலேக்கு முந்தி எழும்பினவன். ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான்'.**

நிறைவேறுதல்: (கி.மு. 1058 - 1056) தாவீது அரசனாகு முன் சவுலுக்குப் பயந்து பெலிஸ்தியரின் நாட்டில் சிக்லாக் என்னும் ஊரில் தன் மனிதரோடு வாழ்ந்து வருகையில் அமலேக்கியர் மேல் அடிக்கடி படையெடுத்து ஆண்களையும் பெண்களையும் கொன்று போட்டு அவர்கள் நாட்டைக் கொள்ளை அடித்து வந்தான் (1 சாமு 27:8,9, 30:1-19). ஆனால் அவர்களில் 400 பேர் தாவீதுக்கு தப்பி ஓடிப் போனார்கள். எசேக்கியா மன்னன் காலத்தில் மீந்திருந்த அமலேக்கியரை சங்காரம் பண்ணி அவர்கள் நாட்டில் யூதர்கள் குடியேறினர் (1 நாளா 4:41-43) (கி.மு. 7153).

அமலேக்கியர் ஒரு பலத்த ஜாதியாக இருந்தபோது இஸ்ரவேலர்கள் ஒரு நாடோடிக் கூட்டம் போல் ஆண்டவர் அருளிய மன்னாவைப் புசித்து, தண்ணீருக்கு துன்பப்பட்டு அலைந்து திரிந்தனர். ஆனால் ஆண்டவரின் சாபத்தினால் 780

ஆண்டுகளுக்குள் அமலேக்கியர் என்கிற ஜாதியே இல்லாமல் அழிக்கப்பட்டுப் போனது. இன்று அமலேக்கியர் என்ற பெயரே இல்லாமல் மறைந்து விட்டது. ஆனால் இஸ்ரவேல் தேசமோ ஒரு சிறிய நாடாக இருந்தாலும் ஆண்டவருடைய ஆசீர்வாதங் களினால் முன்னேற்றம் அடைந்த, பலம் பொருந்திய நாடுகளில் ஒன்றாக, சுற்றியுள்ள அரபு நாடுகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்து வருகிறது.

எய்ட்ஸ் என்னும் உயிர் கொல்லி நோய்

கடந்த 25 ஆண்டுகளாக எய்ட்ஸ் என்கிற கொள்ளை நோயைப் பற்றி தினசரி பத்திரிகைகளிலும், வார, மாத இதழ்களிலேயும் எழுதப்பட்டு வருவதைக் காண்கிறோம். AIDS என்கிற குறுகிய பதத்தின் விரிவாக்கம் Acquired Immune Deficiency Syndrome என்பது. இதைத் தமிழில் விளக்க வேண்டுமானால் 'நோயை எதிர்த்துப் போராடும் சக்தியை சரீரம் இழக்கச் செய்யும் வியாதி' எனலாம். இது ஓரினச் சேர்க்கையினாலும், (Homosex) இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களோடு உடலறவு கொண்டாலோ, அல்லது அவர் பயன்படுத்திய ஊசியை மற்றொருவர் பயன்படுத்தினாலோ, அல்லது அவர்களோட ரத்தம் மற்றவர் உடம்பில் சேர்ந்தாலே இந்த உயிர்க் கொல்லி நோய் உண்டாகிறது என்று மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

ஓரினச் சேர்க்கை உயிரை வாங்கும்

சோதோம், கொமோரா பட்டிணங்களில் இந்தப் பாவம் பரவியிருந்தபடியால் கிறிஸ்துவுக்கு 2025 ஆண்டுகளுக்கு முன்பே ஆண்டவர் வானத்திலிருந்து அக்கினியையும், கந்தகத்தையும் அனுப்பி அந்தப் பட்டிணங்களை அழித்துப் போட்டார் (ஆதி 19:4-14). இந்தப் பாவத்தைக் குறித்து ஆண்டவர் மோசேயின் மூலமாகவும் பரிசுத்த பவுலின் மூலமாகவும் கூறியிருப்பதைப் பாருங்கள். லேவியராகமம் 18:22, 29 (கி.மு. 1490): (22) **'பெண்ணோடு சம்போகம் பண்ணுகிறது போல ஆணோடு சம்போகம் பண்ண வேண்டாம். அது அருவருப்பானது. (29) இப்படிப்பட்ட அருவருப்பானவைகளில் யாதொன்றையும் யாராவது**

செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் ஜனத்தில் இல்லாதபடிக்கு அறுப்புண்டு போவார்கள். ரோமர் 1:24, 26, 27 (கி.பி. 60): (24) இதன் நிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். (28) இதன் நிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார். அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அனுபோகத்தை சுபாவத்துக்கு விரோதமான அனுபோகமாக மாற்றினார்கள். (27) அப்படியே ஆண்களும் பெண்களும் பெண்களை சுபாவ அனுபவப்படி அனுபவியாமல் ஒருவரோடு ஒருவர் விரக தாபத்தினாலே பொங்கி, ஆணோடு ஆண், அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதங்களுக்கு தகுதியான பலனை தங்களுக்குள் அடைந்தார்கள்.'

இழிவான இச்சை அழிவுக்கு அழைப்பு

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஓரினச் சேர்க்கை தேவனுடைய ஒழுங்கிற்கு விரோதமான பாவம். பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டபடியே **'இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்'** என்பதுவும், **'ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள்'** என்பதுவும் எவ்வளவு உண்மையாக இருக்கிறது என்று பார்ப்போம். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற சில மேற்கத்திய நாடுகளில் 'உல்லாச சங்கங்கள் என்று நிறுவி தகாத உறவு கொண்டும், ஆணும் ஆணும் மணம் புரிந்து கொள்ளலாம் என்று சட்டம் இயற்றி கர்த்தருடைய நியமத்தை மீறி இந்த தகாத செய்கையை சட்டத்தின் மூலம் நியாயப்படுத்தியதின் நிமித்தமும், இதற்கும் ஒரு படி மேலாக கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சாரார் தங்களுக்கென்று ஓரின சேர்க்கை போதகமார்களை நியமித்து தங்களுக்குள் மணம் முடித்து வைக்க ஒழுங்கு செய்திருப்பதுவும் கடவுளின் தீர்மானத்திற்கு எதிரான பாவம்தான்.

எய்ட்ஸ் எமனின் தண்டாயுதம்

எய்ட்ஸ் நோயின் தன்மை என்னவென்றால் இந்த வியாதி இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களை பலவீனப்படுத்தி

அவைகள் நோய்களை எதிர்த்துப் போரிடும் சக்தியை பூரணமாக இழக்கச் செய்து விடுகிறது. இதனால் எந்த ஒரு சிறு வியாதி ஒரு மனிதனுக்கு வந்தாலும், அதைச் சுகப்படுத்த எவ்வளவு சக்தி வாய்ந்த மருந்துகளைப் பிரயோகப்படுத்தினாலும், அந்த வியாதி குணமாகாமல் அந்த வியாதியினாலேயே அந்த மனிதன் இறந்து போவான். அவன் எந்த வயதாக இருந்தாலும் எய்ட்ஸ் வியாதி பிடித்த ஒன்று முதல் மூன்று வருடங்களுக்குள் அந்த மனிதன் கண்டிப்பாக இறந்து போவான். உலகத்தின் பல நாடுகளிலும் எவ்வளவோ ஆராய்ச்சிகள் செய்தும் இந்த வியாதியைக் குணப்படுத்தக் கூடிய மருந்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

போதையால் உயிருக்கு வாதை

ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, முதலிய நாடுகளில் போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்கள் அதிகப் பாதிப்புக் குள்ளாகி இருக்கிறார்கள். 30 ஐரோப்பிய நாடுகளில் 3 முதல் 8 லட்சம் பேர் வரை இந்த வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என்று 1988ல் மதிப்பீடு ஒன்று கூறுகிறது. 1991க்குள் 2,70,000 அமெரிக்கர்கள் இந்த நோயினால் பீடிக்கப்படுவார்கள் என்றும், 1,79,000 பேர் இந்த வியாதியினால் அங்கே அவர்கள் இறந்து போவார்கள் என்றும் ஒரு மதிப்பீடு கூறுகிறது. 1991க்குள் உலகம் முழுவதும் 6,40,00,000 (ஆறு கோடி நாற்பது லட்சம்) பேர் இந்த வியாதியால் பீடிக்கப்படலாம் என்று அதே மதிப்பீடு கூறுகிறது.

எய்ட்ஸின் பிடியில் இந்தியா

இந்தியாவில் இன்னும் ஐந்து வருடங்களில் (1995க்குள்) எய்ட்ஸ் நோயை பரப்பக் கூடிய லட்சக்கணக்கான நோயாளிகள் இருப்பார்கள் என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது. இப்பொழுது பம்பாயிலும், சென்னையிலும்தான் அதிக எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. 1991ல் 1 கோடிப் பேர் வரை இந்த நோயின் கிருமிகளைப் பெற்று ஆனால் அதன் அகோரம் தெரியாமல் மற்றவர்களுக்கும் இந்த நோயைப் பரப்பிக் கொண்டிருப்பார்கள் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் நோய் தடுப்பு மையத்தின் ரிப்போர்ட் ஒன்று கூறுகிறது.

ஓரினச் சேர்க்கையினால் ஆரம்பித்த இந்த எய்ட்ஸ் நோய் தற்போது நல்லொழுக்கம் சீர்குலைந்து போனதின் காரணமாக பல இனச் சேர்க்கையால் அதிவிரைவாகப் பரவிக் கொண்டு இருக்கிறது. மனிதனுக்கு நோயினின்று பாதுகாப்பு அளிப்பதில் குறை உண்டாக்கும் விஷ நீர் (Human Immuno deficiency virus (HIV) முதலில் ரத்தத்தில் காணப்பட்டு அது எய்ட்ஸ் நோயாக மாறுகிறது, முற்றுகிறது. 1981ல் அநேகமாக இல்லாமலிருந்த இந்த நோய் 1990ல் 66 லட்சமாக பெருகி இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

கொள்ளை கொள்ளும் கொடிய நோய்

உலக சுகாதார நிறுவன இயக்குநரின் கணிப்புப்படி ஒவ்வொரு வருஷமும் எய்ட்ஸ் நோய் எண்ணிக்கை இரட்டிப்பாகிக் கொண்டிருக்கிறது. இந்த வேகத்தில் போனால் இன்னும் சில ஆண்டுகளில் 50 கோடிப் பேர் மரித்தும், இன்னும் 50 கோடிப் பேருக்கு மேல் இந்த நோயினால் தாக்கப்பட்டு சாவை எதிர்பார்த்துக் கொண்டும் இருப்பார்கள். பிளேக், காலரா முதலிய கொள்ளை நோய்கள் சில சமயங்களில் பரவுகின்றன. ஆனால் அவைகளுக்கு நிவாரணம் கண்டுபிடிக்கப்பட்டு கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு விட்டன. ஆனாலும் ஆண்டவருடைய கற்பனைகளை அறிந்தும் அவைகளைத் துணிகரமாக மீறும்போது ஆண்டவர் தாம் முன்னறிவித்தபடி சுகப்படுத்த முடியாத கொள்ளை நோயை அனுப்புகிறார் - உபாகமம் 26:58, 59, 61 (கி.மு.1451).

(58) **'உன் தேவனாகிய கர்த்தர் என்றும் மகிமையும், பயங்கரமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு நீ இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப் பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம். நடக்கக் கவனமாய் இராவிட்டால் (59) கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும், உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து (51) இந்த நியாயப் பிரமாண புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணிகளையும், வாதைகளையும் நீ அழியுமளவும் கர்த்தர் உன் மேல் வரப் பண்ணுவார்.'**

நீதி தவறினால் நிச்சயம் பேரழிவே!

எய்ட்ஸ் வேதத்தில் சொல்லப்படாத ஒரு நோய். இதற்கு மருந்தே கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறபடியால் இந்த நோய் பீடிக்கப்பட்ட மனிதருக்கு சாவைத் தவிர வேறு விமோசனமே இல்லை. இவ்விதமாக ஆண்டவர் விதித்த இயற்கை பிரமாணத்தை மீறி அவருடைய திட்டத்திற்கு விரோதமாக அருவருப்பான காரியத்தை செய்யும் எந்த ஆத்துமாவும் **'ஜனத்தில் இல்லாதபடிக்கு அறுப்புண்டு போம்'** என்ற இறைவனின் வாக்கு (லேவி 18:29) அப்படியே நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. எய்ட்ஸ் மட்டுமா? இன்னும் எத்தனை கொள்ளை நோய்கள் மனித வர்க்கத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறது. கேன்சர் (அதிலேயே எத்தனை டைப்புகள், பிளட் கேன்சர், போன் கேன்சர், பிரைன் கேன்சர், ஸ்டமக் கேன்சர், மார்புக் கேன்சர், துரோட் கேன்சர் இப்படி எத்தனை) சிக்கன் குனியா, பறவை காய்ச்சல், வைரல் ஃபீவர், பன்றிக் காய்ச்சல் இப்படி இன்னும் எத்தனையோ புதுசு புதுசாக வந்து கொண்டு இருக்கிறது. இது மாத்திரமா? முன்பு எப்போதும் இல்லாத அளவு புயல், கடல் கொந்தளிப்பு, சுனாமி, வெள்ளம், பூகம்பம், பூமி அதிர்ச்சி, எரிமலை வெடிப்பு, வன்முறை, தீவிரவாதம், கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகள் எல்லாம் நடந்து வருகிறது. இதெல்லாம் இந்த பூமி என்கிற கிரகம் அழிவதற்குரிய முதற்கட்ட எச்சரிக்கை. இந்த பூமி அக்னிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது என வேதம் கூறுகிறது. இந்த அழிவு இன்னும் வெகு தூரத்தில் இல்லை. கூப்பிடு தூரத்திலேயே இருக்கிறது. இதை வைத்துத்தான் **'ஓர் அவசர அறைகூவல்'** என்கிற ஒரு SOS புக்கையே எழுதி வெளியிட்டேன். ஜனங்கள் மனம் திரும்பினால் பிழைப்போம். இல்லையேல்..? நினைத்தும் பார்த்திராத பேரழிவு காத்திருக்கிறது.

இஸ்ரேலுடன் நடந்த யுத்தத்தில் ஆண்டவர் செய்த அற்புதங்கள்

1948ல் இஸ்ரேல் ஒரு சுதந்திர நாடாக பிரகடனப்படுத் தப்பட்டவுடனேயே அதனைச் சுற்றியிருந்த ஆறு அரேபிய தேசங்களும் ஒன்று சேர்ந்து கூட்டுப் படை அமைத்து,

அப்பொழுது தான் பிறந்த குழந்தை போல சுதந்திரம் அடைந்து இருந்த இஸ்ரேல் தேசத்தின் மீது படையெடுத்தனர். ஆண்டவர் அவர்களோடு இருந்து இதுவரை நடந்த ஐந்து யுத்தங்களிலும் அவர்களைக் கண்ணின் மணியைப் போல காத்து ஆறு அரேபிய தேசத்தின் கூட்டுப் படையின் மேல் வெற்றியைத் தந்தார். ஆண்டவர் அந்த யுத்தங்களில் என்ன அற்புதங்களை எல்லாம் செய்தார் என்பதை என்னுடைய **'கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு - பாகம் 1'**ல் எழுதியிருக்கிறேன். இப்போது அதுகுறித்து மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன. அவைகளையும் படித்துப் பாருங்கள். கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர் களோடு தேவன் எப்போதும் இருக்கிறார். தேவன் தமக்கென தெரிந்து கொண்ட ஜனத்தை யாராவது துன்புறுத்தினாலோ, எதிர்த்தாலோ என்ன கதி ஆகும் என்பதற்கு கீழே உள்ளவைகள் ஒரு துளி சாட்சி. ஆண்டவர் தான் ஏற்கனவே அவருடைய பிள்ளைகளுக்கு வாக்குத் தத்தம் கொடுத்திருக் கிறாரே. **'உனக்கு விரோதமாக எழும்பும் உன் சத்ருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறியடிக்கும்படி ஒப்புக் கொடுப்பார். ஒரு வழியாய் உனக்கு எதிராக புறப்பட்டு வருகிறவர்கள். ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப் போவார்கள்'** என்று உபாகமம் 28:7லிலும், **'உன்னோட போராடினவர்களை தேடியும் காணாதிருப்பாய். உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல் பொருளாவார்கள்'** என்று ஏசாயா 41:12லிலும் கூறியிருக்கிறாரே.

எட்மண் (ஆன்மிகம்) ஆலன்பி

1917ல் எகிப்தின் துரிதப்படை சீனாய் பாலைவனத்தில் இஸ்ரேலையும், எருசலேமையும் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. மனித மிருகம் என்று கூறப்பட்ட எட்மண்ட் ஆலன்பீ என்கிற ஒரு கிறிஸ்தவ ஜெனரலே அந்தப் படையை நடத்திக் கொண்டு சென்றார். இஸ்ரேலை அடைந்த பின்பு, எருசலேமின் புனித பூமியில் ரத்தம் சிந்துதலைப் பற்றி ஒரு தயக்கம். ஜெபம் செய்துவிட்டு கீழ்க்கண்ட பைபிள் வசனத்தைப் படித்தார்.

'கர்த்தர் என்னுடனே சொன்னது சிங்கமும், பாலசிங்கமும் தங்கள் இரையை பிடித்திருக்கும்போது கெர்ச்சித்து, தங்களுக்கு விரோதமாக

கூப்பிடுகின்ற திரளான மேய்ப்பரின் சத்தத்தினாலே கலங்காமலும், அவர்கள் அமளியினாலே பணியாமலும் இருக்கிறது போல, சேனைகளின் கர்த்தர் சீயோன் மலைக்காகவும், அதன் மேட்டுக்காகவும் யுத்தம் செய்ய இறங்குவார். பறந்து காக்கிற பட்சியைப் போல சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதாரமாக இருப்பார். அவர் அதைக் காத்து தப்பப் பண்ணுவார். அவர் கடந்து வந்து விடுவிப்பார்' என்று ஏசாயா 31:4,5ல் வாசித்தார்.

ஆலன்பி ஆண்டவரின் வார்த்தைகளில் சிங்கங்கள் ஜாடையாக குறிப்பிட்டுள்ளதைக் கண்டார். இங்கிலாந்தைச் சேர்ந்தவராக இருந்தபடியால் அவருக்கு கிரேட் பிரிட்டனின் தேசிய சின்னம் சிங்கம் என்பதை அறிவார். சியோன் (எருசலேமுக்காக) ஆண்டவர் ஒரு சிங்கம் போல யுத்தம் செய்வார் என்று ஏசாயா தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளார் என்று உணர்ந்தார். பறந்து காக்கிற பட்சியைப் போல அவர் களமிறங்கி யுத்தத்தில் வெற்றியைத் தருவார் என்பதையும் உணர்ந்தார்.

எருசலேமின் மேல் சின்ன ஸ்கவுட் விமானங்களை பறக்கவிட்டு, அதிலிருந்து துருக்கி மொழியில் எழுதப்பட்டிருந்த துண்டு பிரசுரங்களின் மூலம் எருசலேமை சரண்டர் செய்து ஒப்புவிக்கும்படி துருக்கியர்களுக்கு கட்டளையிட்டார். துருக்கியரில் அநேகர் அப்போது ஒரு விமானத்தையும் பார்த்தது கிடையாது. விமானத்தைப் பார்த்து அப்படியே பயந்து நடுங்கி விட்டனர். எருசலேமை சரண்டர் செய்யச் சொல்லி போடப்பட்ட அந்த துண்டு பிரசுரம் ஆலன் பீயால் கையெழுத்திடப்பட்டு இருந்தது. அரேபிய மொழியில் (ஆலன்பியைப் போல்) அல்லா நபி என்றால் அவர் இறைவனின் தீர்க்கதரிசி என்று அர்த்தம். எதிர்த்துப் போராடாமல் துருக்கியர்கள் எருசலேமை சரண்டர் செய்தனர். பிரிட்டன் 1917ல் புனித நகரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அதை 1948 வரை ஆக்கிரமித்து இருந்தது.

10ம் நூற்றாண்டில் ஒரு இஸ்லாமிய கவிஞர் எருசலேமுக்குள் ஒரு தீர்க்கதரிசி நுழைவார் என எழுதியிருந்தார். ஒரு வெள்ளைக் குதிரையில் ஏறி ஆலன்பீ நகரத்திற்குள் பவனி வருவதற்குப் பதில் அவர் தனது படைகளோடு நகருக்குள் நடந்தே நுழைந்தார்

என்று கூறப்படுகிறது. அது தேவனுடைய சித்தம் என்பதை உணராமலேயே ஆலன்பீ நடந்து வர முடிவெடுத்தார். நகரம் பிரிட்டிஷின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபடியால், 1948ல் இஸ்ரேல் தேசம் சுதந்திரம் அடைவதற்கு குறைந்த எதிர்ப்பே இருந்தது. துருக்கியரின் கட்டுப்பாட்டிற்குள் எருசலேம் இருந்திருந்தால் அது அவ்வளவு எளிதாக அதிக சிரமம் இன்றி சுதந்திரம் அடைந்திருக்க முடியாது.

1948ல் நேத்தன்யாவில் (Nathanya) நடந்த யுத்தம்

1948 மே மாதம் 15ம் தேதி இஸ்ரேல் ஒரு சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டபோது அவர்களிடம் உண்மையிலேயே எந்த படை பலமும் இல்லை. இஸ்ரேலிடம் ஐந்து மெஷின் கன்களும், அதற்கு 15 ரவைகளும், ஒரே ஒரு மோட்டார் ஷெல்லும், ஒரே ஒரு டேங்க்கும் மட்டுமே இருந்தன. சுற்றி இருந்த எல்லா அரேபிய தேசங்களும் ஒன்றுசேர்ந்து கூட்டுப் படை அமைத்து, இஸ்ரேலை தாக்க எல்லா முஸ்தீபுகளையும் செய்து விட்டன.

நேத்தன்ய யுத்தம் டெல் அவிவ்விலுக்கும், ஹெய்ப்பாவுக்கும் இடையில் நடந்தது. இஸ்ரேல், சுதந்திரம் அடைந்த எட்டாம் நாள் இந்த யுத்தத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் இஸ்ரேலியர்கள் வேறு திட்டம் வைத்திருந்தனர். மே மாதம் 23ம் தேதி நள்ளிரவிலேயே ஆண்கள், பெண்கள் குழந்தைகள் அனைவரும் அவர்களோட கார்கள், டிரக்குகள், டாக்சி எல்லாவற்றையும் கடற்கரையில் ஒண்ணாகப் பக்கத்தில் பக்கத்தில் நிறுத்தினார்கள். அந்த வண்டிகளில் இருந்த எக்ஸாஸ்ட் பைப்புகளை கழட்டி விட்டனர். அதே சமயத்தில் இன்னொரு குரூப் பெரிய பெரிய எண்ணை டிரம்களை எடுத்துக் கொண்டு மலை உச்சிக்கு சென்றனர். அதில் சிறிதும் பெரிதுமான கற்களால் நிரப்பினர். ஒரு சிக்னல் கொடுத்தவுடன் எல்லாரும் கார் டிரக்குகளின் இன்ஜின்களை ஸ்டார்ட் செய்தனர். அதே சமயத்தில் மலை உச்சியிலிருந்து கற்கள் நிறைந்த டிரம்களை கீழே உருட்டி விட்டனர். அந்த நள்ளிரவில் எக்ஸாஸ்ட் இல்லாத இன்ஜின்களின் சத்தத்தினாலும், உருட்டி விடப்பட்ட டிரம்களின் காதைப் பிளக்கும் சத்தத்தினாலும் அந்த ஏரியா முழுமையிலும் ஏற்பட்ட

பயங்கரமான இடிமுழக்கம் போன்ற சத்தத்தினால் அரேபியர்கள் எழுப்பப்பட்டனர்.

அவர்களுக்கு அந்த நள்ளிரவில் எங்கேயிருந்து இவ்வளவு பெரிய சத்தம் வருகிறது என்று தெரியவில்லை. அமெரிக்கா அவர்களுடைய ஷெர்மான் டேங்குகளை இஸ்ரேலுக்குள் கொண்டு வந்து விட்டனர் போலும் என்று நினைத்தனர். அங்கே இருந்த அத்தனை அரேபிய தேசத்துக் கூட்டுப் படைகளும் தங்களின் யுத்த தளவாடங்கள் எல்லாவற்றையும் அப்படியே அங்கேயே விட்டுவிட்டு உயிர்த் தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தனர். ஒன்றுமில்லாததைக் கொண்டு ஆண்டவர் தான் நேசிக்கின்ற மக்களை எப்படிக் காக்கின்றார் பார்த்தீர்களா? ஒரு துளி ரத்தம் சிந்துதல் இல்லாமல் அந்த யுத்தத்தில் இஸ்ரவேலர்கள் ஜெயித்தது மாத்திரமல்ல, யுத்த தளவாடங்கள் எதுவுமே இல்லாமல் இருந்தவர்களுக்கு ஆறு அரேபிய தேசத்து கூட்டுப் படைகள் விட்டுப் போன அனைத்து யுத்த தளவாடங்களும் அப்படியே கிடைத்தன. கர்த்தரோட கருணைக்கும், ஞானத்திற்கும் ஈடு இணை ஏது?

பெத்சியானில் நடந்த யுத்தம்

அரேபியர்கள் பெத்சியான் நகரத்தை கைப்பற்றி விட்டனர். யூதர்களிடம் அரேபியர்களோடு சண்டை போடுவதற்கு வேண்டிய யுத்த தளவாடங்கள் இல்லை. ஆனால் அதில் ஒருவருக்கு அரேபியர்களை ஏமாற்றுவதற்கு ஒரு ஐடியா இருந்தது. இரும்பு பைப்புகளை ஏற்றிக் கொண்டு சென்ற ஒரு டிரக் ஏதோ கோளாறினால் அப்படியே நடு ரோட்டில் நின்றிருந்தது. அந்த ஏரியாவில நிறைய ஓடாத பழைய வேகன்களும் இருந்தன. அந்த வேகன் வீல்களை யூதர்கள் கழட்டினார்கள். இரும்பு பைப்புகளை அந்த வீல்களுக்குள் சொருகினார்கள். அவைகளை அப்படியே ஒரு பீரங்கியைப் போல் செய்து, அதே மாதிரி ஒரு 20 போலியான பீரங்கிகளை உருவாக்கி அதை அந்த நகரத்தை சுற்றியும் பல இடங்களில் அன்று இரவே நிறுத்தி விட்டனர். அவர்களிடம் இரண்டு மோட்டார்கள் மட்டுமே இருந்தன.

மறு நாள் காலையில் ஒலி பெருக்கியின் மூலமாக அரேபியர்களை உடனடியாக நகரத்தை ஒப்படைத்து விட்டு வெளியேறுங்கள், இல்லையேல் அனைவருமே அழிய வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்தனர். அரேபிய லீடர் பலமாக சிரித்தார். யூதர்கள் ஒரு மோட்டாரிலிருந்து ஒரு வெடிகுண்டை நகரத்தை நோக்கிச் சுட்டனர். பிறகு அந்த அரேபிய லீடரிடம் யூதர்கள் 'உங்களைச் சுற்றி நகரின் எல்லா பாகங்களிலும் பீரங்கிகள் சூழ்ந்து இருக்கின்றன. 5 நிமிடத்திற்குள் நகரத்தை காலி பண்ணுங்கள். இல்லையேல் பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று கூறிக் கொண்டு இருக்கும் போதே இரண்டாவது மோட்டாரிலிருந்து ஒரு வெடிகுண்டை வெடித்தனர். அரேபியர்கள் சுற்றும் முற்றும் பார்த்தனர். ஆங்காங்கே பீரங்கிகளின் குழாய்கள் போல் இரும்புக் குழாய்களை நீட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவைகள் எல்லாமே பீரங்கிகள்தான் என்று பயந்து நகரத்தையும், அவர்களையும் ஒன்றுமில்லாமல் நாசமாக்கி விடுவார்கள் என்று பயந்து நகரத்தை அப்படியே சரண்டர் செய்துவிட்டு வெளியேறினர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! அவர் ஆலோசனைக் கர்த்தர் அல்லவா! **'நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழிகளை உனக்குக் காட்டுவேன். உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்'** னு ஆண்டவர் சங்கீதம் 32:8ல் வாக்குக் கொடுத்திருக்கிறாரே.

காகித மிசைல்ஸ்"டன் கூடிய ஒரு கப்பல்

அது 1956ம் ஆண்டு. இஸ்ரேல் சுதந்திரம் அடைந்து ஒரு மாடர்ன் தேசமாகி எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. எப்படி இவர்களை கடிச்சுக் குதறி எடுக்கலாம் என்று காத்திருக்கும் சிங்கம் போல இஸ்ரவேலை சுற்றிலும் பகைமை குணம் கொண்ட எதிரிகள் அந்த தேசத்தை ஒன்றுமில்லாமல் ஆக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றனர். இஸ்ரேலைப் பொறுத்தவரையில் கப்பற்படை என்று ஒன்று அவர்களிடம் இல்லை என்றே கூறலாம். இஸ்ரேலினுடைய முக்கியமான எதிரி பிரசிடெண்ட் நாசர் தலைமையில் உள்ள எகிப்து. எகிப்தியர்களிடம் பலவிதமான லேட்டஸ்ட் மாடர்ன் யுத்தக்

கப்பல்கள் இருந்தன. அதில் ஒரு மிகப் பெரிய கப்பலை இஸ்ரேலிலுள்ள ஹைய்ஃபா நோக்கி செல்லும்படி நாசர் உத்தரவிட்டார்.

இஸ்ரேலிடம் காயலாங் கடைக்குப் போக வேண்டிய ஒரு பாழடைந்த, சிதிலமடைந்த ஒரு பழைய கப்பல் ஒன்று மாத்திரம் இருந்தது. அதை அழகாக பெயிண்ட் பண்ணி ஒரு புதிய கப்பல் போல முதலில் ஆக்கினர். அதில் காகித அட்டைகளினால் உருவாக்கப்பட்ட மிசைல்சை கப்பலின் டெக்கில் வைத்து அந்த மிசைல்ஸ் எகிப்திய கப்பலை நோக்கி இருக்கும்படி பொருத்தினர். எகிப்தியரின் கப்பல் வந்தது. இஸ்ரவேலர்கள் ஒரு சிறிய படகை அதை சந்திப்பதற்கு அனுப்பி 'எங்களிடம் புதிய கப்பல் அதில் பெரிய பெரிய மிசைல்ஸ் எகிப்திய கப்பலை நோக்கி இருக்கிறது. உடனே சரண்டர் ஆகுங்கள். இல்லையேல் அனைவரும் கப்பலோடு அழிவீர்கள் என எச்சரிப்பு விடுத்தனர். எகிப்தியர்கள் சூரிய வெளிச்சத்தில் பளபளவென்று, பிரகாசிக்கின்ற அப்போதுதான் புதிதாக பெயிண்ட் அடிக்கப்பட்ட கப்பலை, காகித அட்டைகளினால் செய்யப்பட்ட பெரிய மிசைல்ஸ் அவர்களை நோக்கி இருப்பதையும் கண்டனர். மறுவார்த்தை பேசாமல் அவர்களுடைய சக்தி வாய்ந்த யுத்த கப்பலை ஒப்படைத்து விட்டு திரும்பினர்.

காயலான் கடைக்கு போக வேண்டிய ஒரு பாடாவதிக் கப்பலையும், அட்டைகளால் செய்த மிசைல்சையும் கொண்டு ஒரு யுத்தத்தைத் தவிர்த்தது மாத்திரமல்ல, ஒரு யுத்தக் கப்பலையும் எகிப்தியரிடமிருந்து பிடுங்கிக் கொண்டனர். வாவ்! ஞானிகளை வெட்கப்படுத்தும்படிக்கு தேவன் உலகத்தில் பைத்தியமானவர்களை தெரிந்து கொண்டார். பலமுள்ளவர்களை வெட்கப்படுத்தும்படிக்கு தேவன் உலகத்தில் பலவீனமான வைகளைத் தெரிந்து கொண்டார் என்று 1 கொரி 1:27ல் சொல்லப்பட்டு இருக்கு. அதுமாத்திரமா? **'உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாக இருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்'** என்று யாக்கோபு 1:5ல் வேற சொல்லி

யிருக்கிறாரே. இஸ்ரவேலர்கள் ஆண்டவரிடம் கேட்கிறார்கள் அவர்களுக்கு புதுசு புதுசா நூதனமான ஐடியாக்களை கொடுக்கிறார்.

1967ம் ஆண்டு யுத்தத்தில் ஆண்டவர் செய்த அற்புதங்கள்

அரேபிய கூட்டுப் படைகளுக்கும் இஸ்ரவேலுக்கும் 1967ல் நடந்த மிகப் பிரசித்தி பெற்ற யுத்தத்தில் ஆண்டவர் எண்ணி மாளாத அற்புதங்களைச் செய்தார். அதில் ஒன்று யுத்த களத்திலிருந்து யுத்த செய்திகளை உடனுக்குடன் சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்த கத்தோலிக்கத்தை சேர்ந்த ஒரு செய்தி நிருபரைக் குறித்ததாகும். இந்த நிருபரை நேரடியாக லாஸ் ஏஞ்சல்ஸிலுள்ள பேட்டன் ரவுஜ் என்கிற இடத்தில் எர்னி மில்சன் சந்தித்திருக்கிறார். அந்த நிருபர் சினாய் பாலைவனப் பகுதியிலிருந்து 1967 யுத்த செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்தார். அந்த அதிபயங்கரமான யுத்தத்தில் மிக அதிகமான உயிர் இழப்புகள் ஏற்பட்டன. ஒரு சமயம் மிகப் பயங்கரமாக காயம் பட்டிருந்த ஒரு இஸ்ரேல் படை வீரரை மெடிக்கல் டெண்ட்டுக்குள் குற்றுயிரும் குலையுயிருமாகக் கொண்டு வந்தனர். அந்த மெடிக்கல் டெண்ட்டிலிருந்துதான் அந்த நிருபர் யுத்த செய்திகளை வயர்லெஸ் மூலமாக அனுப்பிக் கொண்டிருந்தார். அந்த அதிபயங்கரமான யுத்தத்தில் நிறைய பேர் மரித்தனர். கைகால்களை இழந்தனர். படுமோசமாக காயங்கள் பட்டனர். உள்ளே டெண்ட்டுக்குள் கொண்டு வரப்பட்ட அந்த படுகாயமடைந்த படை வீரனைப் பார்த்தான். அவன் வயிற்றில் குண்டு பாய்ந்து குடல் எல்லாம் வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரம்தான். அவன் நிச்சயம் இறந்து விடுவான் என்று தெரியும்.

இருந்தாலும் அந்த சோல்ஜர் முழு நினைவோடு இருந்தான். ஹீப்ரு மொழியில் அவன் ஆண்டவரின் பல நாமங்களை கூறி ஜெபித்தான். அந்த நிருபரை ஆச்சரியத்துக்குள்ளாகும் படிக்கு அந்த சோல்ஜர் திடீரென்று கத்தினான். கட்டிலை விட்டுக் குதித்து எழுந்தான். அவனுடைய வெளியே வந்திருந்த குடல் எல்லாம் திரும்பவுமாய் வயிற்றுக்குள் போயிருந்தது. வயிற்றில் காயம் பட்ட இடமே தெரியவில்லை. அவன் பரிபூரண சுகம்

பெற்று விட்டான். அந்த சோல்ஜர் குதிக்கிறான், கத்தியவாறே ஆண்டவருடைய நாமத்தைப் புகழ்ந்து கொண்டே வெளியே ஓடினான். அந்த நிருபர் எர்னியிடம் 'நான் ஒரு கத்தோலிக்கன். ஆண்டவர் செய்யும் அதிசயங்களை, அற்புதங்களை நம்ப வேண்டியவன். ஆனால் நான் இதுபோன்ற ஒரு அற்புதத்தை இதுவரை கண்டதில்லை. அன்னிக்கு என்னோட இந்த இரண்டு கண்ணாலேயே அந்த அற்புதத்தை எனக்கு முன்னாடியே நடக்கிறதைப் பார்த்தேன்.'

இந்த அற்புதங்கள், அதிசயங்கள் எல்லாமே யுத்தம் அவருடையது. அமெரிக்கா உலகம் முழுக்க தீவிரவாதத்தை எதிர்த்து போராடிக் கொண்டு இருக்கின்றனர். நாம் கண்ணீரோடு ஆண்டவரிடம் அவர்களை காக்கும்படிக்கு அனுதினமும் ஜெபிக்கணும். தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிற இளம் ஆண் பெண் அனைவரையும் தேவன் தன் அற்புதங்களினால் அவர்களைக் காக்கும் படிக்கு உபவாசித்து போராடி ஜெபிக்கணும். ஏனென்றால் அவர்கள் நம்முடைய சுதந்திரத்திற்காக போராடுகின்றனர். பைபிளில் சொல்லப்பட்டு இருக்கிற இறைவன் அற்புதங்களின் தேவன். இன்றும் அவர் தம்மை விசுவாசிப்பவர்களுக்கு அதிசயங்களை செய்து கொண்டே இருக்கிறார்.

நமது தேசத்திலும் ஜாதி, மத, இன மொழியின் பெயரால் பல்வேறு தீவிரவாதங்கள், வன்முறைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. தேசத்தின் சந்தோஷம், சமாதானம், வன்முறை, தீவிரவாதமற்ற ஒரு சமூகம், எந்தத் தடையும் இன்றி யாருக்கு எந்த தெய்வத்தைப் பிடித்திருக்கிறதோ அந்த தெய்வத்தை, மத நம்பிக்கையை கைக் கொண்டு வாழ அனுதினமும் ஜெபித்துக் கொண்டு இருக்கின்ற திருச்சபைகளுக்காக, திருச்சபை போதகர்கள், ஊழியக்காரர்கள், மிஷனரி நிறுவனங்களுக்காக முழங்காலில் நின்று ஜெபிக்க வேண்டும். வன்முறை தீவிரவாதங்களில் ஈடுபடுகின்ற மதவாத சக்திகளுக்காக நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். தேசத்தின் எழுப்புதலுக்காக, அமைதிக்காக, செழிப்பிற்காக, சந்தோஷம், சமாதானத்திற்காக நாம் அனைவரும் எல்லா ஜாதி, மத, இன மொழி வேறுபாடுகள்

அனைத்தையும் மறந்து ஒரு தாயின் மக்களாக வாழ ஜெபம் செய்வோம். சேனைகளின் கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு கண்டிப்பாக பதில் கொடுப்பார். ஆமென்

(இந்த கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதி **Voice of Evangelism, Vol 25/1, Jan. Feb 2003** ல் **Amazing War Stories - God's Provision during Times of War** என்கிற தலைப்பில் **Perry Shone Jr** வெளியிட்டு இருந்தார். அதை தூத்துக்குடியிலிருந்து **Dr. JV** ஜாசன், **DM & S** (சுகந்தி நர்சிங் ஹோம்) எனக்கு அனுப்பியிருந்தார். பெரி ஸ்டோனுக்கும், **Dr. JV** ஜேசனுக்கும் வாசகர்களின் சார்பிலே நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் - எஸ்.தாயப்பன்)

ரஷ்யாவில் உணவுப் பஞ்சம்

எசேக்கியல் தீர்க்கதரிசியின் மூலம் ஆண்டவர் இஸ்ரேல் ஜனங்களுக்கு ஒரு தெளிவான எச்சரிப்பைக் கொடுத்தார். அதாவது **'அவர்கள் தங்கள் கர்த்தரும் ஆண்டவருமாகிய யெகோவா தேவனை விட்டு வேறு தெய்வங்களை வணங்கும்போது மனுஷனுடைய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஆகாரம் கிடைக்காதபடி செய்வேன்'** என்றார் (எசே 4:17, 5:16). **'நான் (கர்த்தர்) பஞ்சத்தை உங்கள் மேல் அதிகரிக்கப் பண்ணி, உங்கள் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்துப் போடுவேன்'.** அதைப் போலவே ஏதாவது ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாக துரோகம் பண்ணும்போது இதே விதமாக தண்டிக்கப்படும் என்று கர்த்தர் கூறியிருக்கிறார்.

எசேக்கியல் 14:13 (கி.மு. 594): **'மனுபுத்திரனே, ஒரு தேசம் எனக்கு விரோதமாக துரோகம் பண்ணிக் கொண்டே இருந்து பாவம் செய்தால் நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி அதில் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி மனுஷரையும் மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன்.'**

நிறைவேறுதல்: 1917ம் ஆண்டு ரஷ்யாவில் அரசனாக இருந்த இரண்டாம் நிக்கலஸ் ஜார் என்ற மன்னனைக் கொன்று பொது உடைமைக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைகளை நிறைவேற்ற மதம்

ஒரு முட்டுக்கட்டையாக இருக்கும் என்று கருதியதால் மதங்களை ஒழிக்கத் தலைப்பட்டனர். மதப் பிரச்சாரம் செய்வது தடை செய்யப்பட்டது. நாத்தீகக் கொள்கை பரப்பப்பட்டது. கிறிஸ்தவர்கள் எதிர்ப்பை தெரிவித்ததால் கிறிஸ்தவ தேவாலயங்கள் இடித்து தகர்க்கப்பட்டன. அவைகள் கிட்டங்கிகளாகவும், கலைக் கூடங்களாகவும் மாற்றப்பட்டன. வேத புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பள்ளிகளில் மத போதனை நிறுத்தப்பட்டு பொதுவுடைமைக் கொள்கைகள் கற்றுத் தரப்பட்டன. வீடுகளில் ஜெபம் தடை செய்யப்பட்டு, பிள்ளைகளுக்கு மதபோதனை செய்யும் பெற்றோர்களும் போதகர்களும் சைபீரியா பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே சுரங்கங்களில் அடிமைகளாக வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். இயேசு கிறிஸ்துவுடைய நாமத்திற்காக சித்திரவதை அனுபவித்து கொலை செய்யப்பட்ட கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைக்கு கணக்கே இல்லை.

செல்வந்தர்கள் என்று கருதப்பட்ட அனைவரும் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டு அவர்களின் சொத்து முழுவதும் நாட்டுடமை ஆக்கப்பட்டது. ரஷ்யா தன் படை பலத்தைப் பயன்படுத்தி ஹங்கேரி, ஆஸ்ட்ரியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லேவியா முதலிய நாடுகளையும் இக்கொள்கையைப் பின்பற்றிட கட்டாயப் படுத்தியது. பின்னர் பொதுவுடைமைக்காரர்கள் அல்பேனியா, எத்தியோப்பியா, சூடான், கம்பூச்சியா, பர்மா, வடகொரியா, சைனா, வியட்நாம், மங்கோலியா, க்யூபா முதலிய நாடுகளிலும் ஊடுருவி அந்த அரசாங்கங்களைக் கவிழ்த்து அவைகளையும் நாத்திக நாடுகளாக மாற்றினர். இப்பொழுது நாஸ்தீகர்களான பொதுவுடைமைக்காரர்கள் கட்சி அமைத்து செயல்படாத நாடுகளே உலகில் இல்லை எனலாம். இக்கொள்கையைப் பின்பற்றியவர்கள் யாவரும் கடவுளை மறுதலித்தவர்கள். அதற்கு காரணமாய் இருந்தது ரஷ்யா.

1917ம் ஆண்டு நடந்த ரஷ்ய புரட்சிக்கு முன்னால் ஜார் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கருங்கடலுக்கு வடக்கே உள்ள கிரிமியா என்ற தீபகற்பமும், அதன் சுற்றுப்புறமும் மிகவும்

செழிப்பான பிரதேசமாக இருந்து ரஷ்ய நாட்டுக்கு வேண்டிய கோதுமையை விளைவித்தது மல்லாமல் சுற்றியுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கும் கோதுமையை ஏற்றுமதி செய்து கொண்டு இருந்தது. அக்காலத்தில் கிரிமியா பிரதேசம் 'உலகத்தின் ரொட்டிக் கூடை' என்று அழைக்கப்பட்டது. ஆனால் கம்யூனிஸ்டுகள் நாட்டைக் கைப்பற்றிய பின்னர் ரஷ்ய வரலாற்றிலேயே கண்டிராத குளிர் அந்த நாட்டைப் பாதித்து கோதுமை விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. அதோடு கூட பொதுவுடைமை ஆதிக்கத்தில் தொழிலாளர்களுக்கு விவசாயத்தில் ஆர்வமும், அக்கறையும் இல்லாமல் போனதும் ஒரு காரணமாய் இருக்கலாம். ரஷ்ய விஞ்ஞானிகள் சீதோஷ்ண நிலையை மாற்ற எவ்வளவோ முயற்சி செய்தும் அது பலன் தரவில்லை என்று கூறப்படுகிறது. (ஆதாரம்: **The Coming peace in the Middle East by TIM La Haye - page 126)**

சோவியத் சோஷலிஸ்ட் நாடு உலகத்தின் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பாகமாகும். அது இயற்கை வளங்கள் மிகுந்த ஒரு நாடு

அகில உலக நிலக்கரி வளத்தில்	57%
அகில உலக நில எண்ணெய்	58%
அகில உலக மரக்காடு	25%
அகில உலக தங்கக் கனிமம்	50%க்கு மேல்

(ஆதாரம்: **God's Promises by Salem Kirban)**

அகில உலகத்தின் பொட்டாசியம் உப்பு	54%
அகில உலகத்தின் மாங்கனீஸ்	88%
அகில உலகத்தின் பாஸ்பேட் உப்பு	30%
அகில உலகத்தின் இரும்புத்தாது	25%

அகில உலகத்தின் உருக்கு 19.5% அங்கு கிடைக்கிறது.

(ஆதாரம்: **Guide to Survival by Salem Kirban, 1990 Edition: page 137)**

இத்தனை இயற்கை வளங்கள் இருந்தும் ரஷ்யா கர்த்தரை நிராகரித்ததின் நிமித்தமும், கிறிஸ்தவர்களையும், போதகர் களையும் துன்புறுத்தியதன் நிமித்தமும், கிறிஸ்தவ பிரச்சாரத் துக்குத் தடை விதித்ததின் நிமித்தமும் அதன் பொருளாதாரமும் விளைச்சலும் சீர்குலைந்து பிற நாடுகளைக் கெஞ்சும் நிர்ப்பந்தம்

அதற்கு நேரிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நாட்டிற்கு கர்த்தர் வைத்திருக்கும் தண்டனை, மனிதன் உயிரோடு ஜீவிப்பதற்கு அத்தியவாசியமான உணவுத்தட்டுப் பாடுதான்.

ரஷ்யா விஞ்ஞானத்தில் எவ்வளவோ முன்னேறி இருந்தாலும், எவ்வளவோ படை பலம் பெற்று உலக நாடுகளை பயமுறுத்திக் கொண்டிருந்தாலும், தன் நாட்டு ஜனத் தொகைக்கு வேண்டிய உணவு உற்பத்திக்காக விசேஷ ஆராய்ச்சிகள் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க பெரும் பிரயாசங்கள் எடுத்தாலும், சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் ரஷ்யாவுக்கு உபாகமம் 28:23ன்படி **'வானத்தை வெண்கலமாகவும், பூமியை இரும்பாகவும்'** ஆக்கி, அதற்கு உணவுப் பற்றாக்குறையை உண்டாக்கி உலகத்திலுள்ள அநேக நாடுகளிடம் உணவுக்காக் கையேந்தி நிற்கும் நிலையை உருவாக்கி இருக்கிறார். தன்னுடைய உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ரஷ்யா, அமெரிக்கா ஐக்கிய நாடுகளையே அதிகம் சார்ந்திருக்கிறது. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா முதலிய நாடுகள் அதிகமான உணவுப் பண்டங்களை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்கின்றன. உலகத்தில் 70 கோடிக்கும் மேல் ஜனத்தொகை கொண்ட இரண்டாவது ஜனம் பெருத்த நாடாக விளங்கும் நம் இந்தியா கூட ரஷ்யாவுக்கு உணவுப் பண்டங்களை அனுப்பி உதவிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் ரஷ்யாவின் பரிதாப உணவு நிலையை ஒருவாறு யூகிக்கலாம்.

ரஷ்யாவின் நிலப்பரப்பு அமெரிக்காவை விட 0.1% அதிகம். ஆனால் இந்தியா ரஷ்யாவை விட 1.7 பங்கு அதிகம். இந்தியா ரஷ்யாவுக்கு கோதுமை, அரிசி, பயறு வகைகள், எண்ணெய் வகைகள், பழவகைகள், ஊறுகாய் வகைகள், மிளகு, ஏலக்காய், மிளகாய், வெங்காயம், காப்பி, தேயிலை, புகையிலை போன்ற உணவுப் பொருட்களை மட்டும் இந்திய அரசாங்கக் கணக்குப்படி 1985/86ல் 683 கோடி ரூபாய் பெருமானத்திற்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. ரஷ்யாவின் கணக்குப்படி தனது மொத்த இறக்குமதியில் ஐந்தில் ஒரு பாகம் (21%) உணவுப் பொருள்கள்தான் என்று கூறுகிறது.

ரஷ்யாவுக்கு வட எல்லையில் குடாக்கள் நிறைந்த அதிக நீண்ட கடற்கரை இருந்தும் மீன் வளம் இல்லாமல் வெளிநாடு

களில் இருந்து மீன் உணவு கூட இறக்குமதி செய்ய வேண்டி யுள்ளது. 1985 - 86ம் வருடத்தில் இந்தியா ரஷ்யாவிற்கு 18 லட்சத்தி 70 ஆயிரம் ரூபாய்க்கு இறால் முதலிய மீன்களை ஏற்றுமதி செய்துள்ளது. ரஷ்யா தான் ஆண்டவரை எதிர்த்து நின்றது மட்டுமல்லாமல், பிற நாடுகளையும் கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்ய நிர்பந்தித்தபடியால் எசேக்கியல் மூலம் தாம் உரைத்தபடியே ரஷ்யாவுக்கு 'அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்துப் போட்டார்'

இதை ரஷ்ய தலைவர் மீகாயீல் கார்ப்பஷேவ் உணர்ந்ததினால் தான் போலும் அந்த நாட்டின் கொள்கையை மாற்றி பரிசுத்த வேதாகமத்தை அங்கு கொண்டு செல்லவும், வேதாகமத்தை அங்கேயே அச்சிடவும், கிறிஸ்தவ ஆராதனைகளுக்கு தடைகளை நீக்கியும், யூதர்கள் ரஷ்யாவை விட்டு, தாராளமாக வெளியேறத் தடைகளை நீக்கியும், நாடு ஜனநாயகப் பாதைக்கு திரும்பவும் நடவடிக்கைகள் எடுத்தார். இவ்விதமாக எசேக்கியல் 14:19ல் கூறப்பட்ட முன்னறிவிப்பு நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. 1987ல் ரஷ்ய மொழியில் ஒரு லட்சம் பரிசுத்த வேதாகமத்தை அச்சடிக்க ரஷ்ய அரசாங்கம் ரஷ்ய வைதீக திருச்சபைக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

அதைப் போலவே ரஷ்ய மொழியில் பார்க்ளேயின் வேத வியாக்கியான புத்தகங்களை 15 தனி புத்தகங்கள் கொண்ட 5000 செட்டுக்கள் (மொத்தம் 75,000 புத்தகங்கள்) ரஷ்யாவுக்குள் இறக்குமதி செய்ய ரஷ்ய அரசாங்கம் உத்தரவு கொடுத்தது. ரஷ்யாவிலும் இதர ஐரோப்பிய பொதுவுடைமை நாடுகளிலும் இப்போது ஜனநாயகத்தை ஆதரித்து நடந்து கொண்டிருக்கும் புரட்சிக்கு முழுக் காரணம் நாஸ்தீகமும், பொதுவுடைமைக் கொள்கையுமே. முற்றிலும் தங்கள் குறிக்கோள்களில் தோல்வி அடைந்து போனதால், ஜனங்கள் பொதுவுடைமைக் கொள்கைகளில் நம்பிக்கையிழந்து போனார்கள்.

ரஷ்யாவில் லஞ்ச ஊழல் அளவு கடந்துள்ளது. நாணய நோட்டுக்கள் மதிப்பிழந்து அநேகமாய்ப் பிரயோஜனமற்றவை களாய் போய்விட்டன. ஜனங்கள் வேலை செய்வதாய் பாசாங்கு செய்கிறார்கள். சர்க்காரும் அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதாய்

பாசாங்கு செய்கிறது என்று ஒரு மாத இதழ் வர்ணிக்கிறது. **(Corruption is rampant. The currency in nearly useless. The People pretend to work and the Government pretends to pay)**

இந்த நிலமையினால் ரஷ்யாவின் பொருளாதாரம் சீர்குலைந்து போனபடியால் ரஷ்ய தலைவர் மிக்காயில் கார்ப்பசேவ் நாட்டை ஜனநாயகப் பாதைக்கும், ஆஸ்தீகத்துக்கும் திருப்புவதற்கு பிரயாசம் எடுத்தார். கடவுள் இல்லை. எல்லாம் இயற்கையாய் தோன்றியவை என்று கடவுளை மறுதலிக்கும் தேசமும், மனிதரும், விஞ்ஞானத்தில் எவ்வளவுதான் முன்னேறினாலும் கடவுளால் வானம் வெண்கலமாகவும், பூமி இரும்பாகவும் மாற்றப்பட்டு மனிதன் ஜீவிப்பதற்கு அத்தியாவசியமாய் தேவைப்படுகிற உணவு கிடைக்காமல் போகும்போது மனிதன் தன் கருத்துக்களை மாற்றி கடவுளைத் தேட வேண்டிய் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

ரஷ்யாவும் அதைச் சார்ந்த நாடுகளும் தாங்கள் செய்த தவறுகளை உணர்ந்து இப்பொழுது கடவுளைத் தேடவும், அவருடைய பரிசுத்த வேதத்திற்கு விதித்திருந்த தடையை நீக்கியும், கிறிஸ்தவ ஆராதனைகள் தங்கு தடையின்றி நடத்தவும் அனுமதியும் கொடுத்து சகஜ நிலைமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் நமது தேசமோ ஆன்மீகத்திலும், பக்தியிலும் ஊறிய தேசம். சித்தர்கள், ஞானிகள், பக்தி சிரோன்மணிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், திருவள்ளுவர், விவேகானந்தர் போன்ற அனைவருமே கிறிஸ்துவே தேவன் என்று போற்றிப் புகழ்கிறார்கள். இந்து மத வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷத் துக்கள் எல்லாமே இயேசு கிறிஸ்துவையே பறையறிவிக்கின்றன. கிறிஸ்தவத்தினால் நம் நாடு முன்னேறியிருக்கிறது. வளம் பெற்றிருக்கிறது. நமது தேசத்து மக்களை அது பண்படுத்துகிறது, பக்குவப்படுத்துகிறது. பரிசுத்தப்படுத்துகிறது. நமது தேசத்தில் முக்கியமாகக் கருதப்படும் இந்து மதத்தின் இரு பிரிவுகளான சைவம், வைணவம் உருவானதே கிறிஸ்துவத்தினுடைய தாக்கத்தால்தான் (சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும் என்ற நூலைப் படிக்கவும்), கிறிஸ்தவம் மேலை நாடுகளில்

பரவுவதற்காக முன்பாகவே இந்தியாவில் அது தழைத்தோங்கி இருந்தது என டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், டாக்டர் ராஜேந்திர பிரசாத், டாக்டர் அம்பேத்கர், டாக்டர் ஜவஹர்லால் நேரு என அனைத்துத் தேசத் தலைவர்களும் கூறியிருக்கின்றனர். அப்பேர்ப்பட்ட கிறிஸ்தவத்திற்கு நமது நாட்டில் தடை, தேவாலயம் கட்ட அனுமதி இல்லை. இருக்கிற ஆலயங்களுக்கு சில மதவாத அமைப்புகளால் தொந்தரவு, கிறிஸ்தவ போதகர் களையும், கிறிஸ்தவர்களையும் தாக்குகின்றனர். தேவன் அனைத் தையும் நீடிய பொறுமையோடு பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

நான் பல்வேறு திருச்சபைகளுக்கு சென்று செய்தி அளிக்கிற சுவிசேஷகன். அங்கேயுள்ள தேவாலயங்களுக்கு, போதகருக்கு, கிறிஸ்தவத்திற்கு எதிராக செயல்பட்ட பலரைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறேன். இறுதியில் அவர்கள் என்ன பரிதாபத்திற்கு ஆளானார்கள் என்றும் கேட்டிருக்கிறேன். அதை எல்லாம் நான் பொதுவாக எழுத முடியாது. ஊர் பெயர், போதகரின் பெயர் எதிர்த்தவர்களின் பெயர், அவர்கள் என்ன ஆனார்கள் என்றெல்லாம் விலாவாரியாக எழுத வேண்டும். ஆதாரத்தோடு எழுத வேண்டும். ஆகவேதான் அதை இதுவரை எழுதாமல் இருக்கிறேன். எதிர்த்தவர்கள் எவருமே வாழ்ந்ததில்லை. இன்றைய போதகர்களில் அநேகர் இயேசுவை, கிறிஸ்தவத்தை எதிர்த்தவர்களே. ஏன் நானே கிறிஸ்தவத்தை எதிர்த்தவன்தானே. குடும்பத்தில் ஒரு மரண அடி விழுந்தது. அப்புறம்தான் நான் செய்த தவறுகளை உணர்ந்தேன். (பார்க்க: எனது சாட்சி நூல் ‘என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்’ புத்தகமும் விசிடியும் பல மொழிகளில் இருக்கிறது. எல்லாமே ரூ.பத்து மட்டுமே)

ஆக இவ்விதமாக ஆண்டவர் எசேக்கியல் தீர்க்கதரிசியின் மூலமாக 2500 ஆண்டுகளுக்கு முன் கூறிய வாக்கு ரஷ்யாவிலும் அதன் நேச நாடுகளிலேயும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

23.7.90 முதல் 25.7.90 வரை நமது பாரதப் பிரதமர் ரஷ்யாவிற்கு விஜயம் செய்தபோது அவரது குழுவோடு சென்ற ஒரு பத்திரிகை நிருபர் ரஷ்யாவின் ஆகார நிலையைக் குறித்து ‘ரஷ்யாவின் தலைநகரில் நான் ஒருபோதும் இவ்வளவு ஆகாரக் குறைவையும், அத்தியாவசியப் பண்டங்களின் குறைவையும்

கண்டதில்லை. இன்று தங்கள் சட்டைப் பைகளில் நிறைய ரூபில்களும், டாலர்களும் வைத்திருப்பவர்கள் கூட சாப்பிட ஏதாவது கிடைக்குமா? என்று உறுதியற்றவர்களாகவே இருக்கின்றனர். பெரிய சாப்பாட்டு விடுதிகளில் கூட பல வார அல்லது மாதங்களுக்கு முன்னதாகவே சாப்பாட்டு மேஜைகள் ரிசர்வ் செய்து வைக்கப்படுகின்றன. சின்ன சாப்பாட்டு விடுதிகளில் அலமாரிகள் எல்லாம் காலியாகவே கிடக்கின்றன என்று எழுதியிருக்கிறார்.

அநேக ரஷ்யர்கள் தங்கள் பல வருட வருமானத்தை கார் வாங்க முன்பணமாக கட்டியிருக்கின்றனர். ஆனால் ஒரு கார் கிடைக்க 7 முதல் 10 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும். ரஷ்யாவில் எல்லா வயதினரும் விசிஆர், கலர் டிவி, கேசட்டுகளை, கணக்குப் பார்க்கும் சிறு கம்ப்யூட்டர்களுக்காக ஏங்கிக் கிடக்கின்றனர். மேற்கு ஐரோப்பா அல்லது அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு போய் வருபவர்கள் இப்பேர்ப்பட்ட சாதனங்களை ஏராளமாகக் கொண்டு வருகின்றனர். **(Source: Indian Express, dated 19.8.90)**

விஞ்ஞானத்தில் அதிக முன்னேற்றமடைந்த நாடு. உலகத்திலேயே இரண்டாவது பலமிக்க நாடு என்று நாம் எண்ணும் கம்யூனிஸ்ட் நாடாகிய ரஷ்யா மற்ற உலக நாடுகளை கடவுளிடமிருந்து பிரித்ததினாலும், கிறிஸ்தவர்களுக்கு கொடுத்த துன்பங்களினாலும், அடைந்து வரும் தண்டனையை மேற்கண்ட வாக்கியங்களிலிருந்து அறியலாம். இதற்கு ஒரே பரிகாரம், ரஷ்யா தன் நாத்தீகக் கொள்கையையே மாற்றி கர்த்தரை கடவுளாக ஏற்றுக் கொள்வதுதான்.

1990ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் தேதி கூடிய சோவியத் பாராளுமன்றக் கூட்டத்தில் சமய சுதந்திரம் அளிப்பது என்றும், கடந்த 73 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் முழுவதும் தளர்த்தப்பட்டு, மதச் சங்கங்கள், சகோதரத்துவக் குழுக்கள், சமய நடவடிக்கைகள் முதலியன நடத்த முழுச் சுதந்திரம் அளிப்பது என்றும், கோயில்களை சமய வழிபாட்டிற்கு அரசாங்கம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றும், சமயக் கழகங்கள் வெளிநாடுகளுக்குத் தங்கள் பிரதிநிதிகளை சமயப் படிப்புக்கு அனுப்பலாம் என்றும், வெளிநாடுகளிலிருந்து மாணவர்களை சோவியத் யூனியனுக்குள்

அனுமதிக்கலாம் என்றும், சமய செயல்பாட்டிற்கோ, அல்லது நாத்தீகக் கொள்கையை பரப்பவோ அரசாங்க நிதி செலவு செய்யப்படக் கூடாது என்றும், இத்தீர்மானங்களுக்கு 341 பேர் ஆதரவு அளித்தும், ஒருவர் ஓட்டளிக்காமலும் தீர்மானங்கள் நிறைவேறின (ஹிந்து நாளிதழ், 28.9.99).

இந்த சீர்திருத்தங்கள் மூலமாக சோவியத் அரசாங்கம் மனம் திரும்பி கர்த்தரை அண்டி ஜீவித்தால் நினிவே பட்டிணத்தின் மேல் ஆண்டவர் மனமிரங்கி அதை அழிக்காமல் விட்டதைப் போல ரஷ்யாவையும் மன்னித்து அவர்களை இந்த இக்கட்டுகளிலிருந்து விடுவிப்பார் யோனா 3:10 (கி.மு. 862ல்). அவர்கள் (நினிவே பட்டிணத்தார்) தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினார்கள் என்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து தாம் அவர்களுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார் என்று பார்க்கிறோமே. தாவீது அரசனும் கர்த்தருடைய மன்னிப்பின் தன்மையைக் குறித்து சங்கீதம் 86:5ல் **'ஆண்டவரே நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாய் இருக்கிறீர்'** என்று பாடுகிறாரே. ஆனால் இதற்கு நாடு மனந்திரும்ப வேண்டும். நினிவே நகர மக்களைப் போல இவ்வளவு பெரிய நம் நாட்டின் மக்கள் அனைவரும் அவ்வளவு சடுதியில் மனம் திரும்பு வார்களா? பல நூற்றாண்டுகளாக விக்கிரஹ ஆராதனையில் ஊறிப் போய் கிடக்கிறார்களே என் தேசத்து மக்கள். சிலர் அரசியல் லாபத்துக்காக ஜனங்களை திசை திருப்பி விட்டு கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவத்திற்கும் எதிராக தீவிரவாதத்தை தூண்டி விடுகிறார்களே. இருக்கின்ற இத்தனை லட்சம் கோயில்கள் போதாதென்று இன்னும் புதிதாக கோயிலைக் கட்டுவோம் என்று கூறுகின்றனரே. அந்தக் கோயிலையும் ஒரு மசூதியை இடித்துக் கட்டுவோம் என்று கொடி பிடிக்கின்றனரே. இந்த மதவாத சக்திகள் என்றைக்கு மனம் திரும்பப் போகின்றன? எல்லா கிறிஸ்தவர்களும் இவர்களுக்காக கண்ணீரோடு ஜெபிப்போம். கிறிஸ்தவத்தை எதிர்ப்பவர்களின் கண்கள் திறக்கப்படணும். அவர்களும் மனம் மாற வேண்டும். பரலோக பிரஜைகளாக மாற வேண்டும் என்று மன்றாடி ஜெபிப்போம்.

1990 அக்டோபர் 6ம் தேதி ஹிந்து நாளிதழ் பத்திரிகையில் சோவியத் யூனியன் பஞ்சத்தை எதிர்நோக்கி இருக்கிறது என்று ஒரு நீண்ட கட்டுரையை வெளியிட்டது. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக (நாட்டில் நாத்தீகம் புகுத்தப்பட்ட பின்பு) ரஷ்யாவின் தவறான திட்டங்களினால் விவசாயத் துறையும், பொருளாதாரத் துறையும் மிகவும் பின்தங்கி 1991ம் ஆண்டு நாடு மிகவும் பாதிப்புக்குள்ளாகும் என்று அந்தக் கட்டுரை கூறுகிறது. சோவியத் ரஷ்யாவில் மனந்திரும்புதலுக் குரிய அறிகுறிகள் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக 73 ஆண்டுகளுக்குப் பிறகு மாஸ்கோ நகரின் சிகப்பு சதுக்கத்திலுள்ள பரிசுத்த பேசில் ரோமன் கத்தோலிக்கக் கோயிலில் 13.10.1990 சனிக்கிழமையன்று முதன் முதலாக பிரார்த்தனை நடத்தப்பட்டது. கோயிலுக்கு வெளியிலும், ஒலிபெருக்கிகள் அனுமதிக்கப்பட்டு இருந்தன. குறுகிய கால அவகாசத்திலும் 1000 பேர் ஆராதனையில் கலந்து கொண்டனர். (ஹிந்து நாளிதழ், 15.10.90)

ஒருவேளை ரஷ்யத் தலைவர் மிக்காயில் கோர்ப்பசேவ் உண்மையில் நாட்டை மனந்திரும்புதலுக்கு ஏற்றவாறு வழி நடத்திச் சென்றாலும் பரிசுத்த வேதாகம தீர்க்கதரிசனங்கள் நிறைவேறத்தக்கதாய் இனிவரும் தலைவர்கள் ரஷ்யாவை பழைய பாதையிலேயே நடத்திச் செல்லலாம். யூத மக்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறத் தடை விதித்து வெளியேறு கிறவர்களிடமிருந்து அதிக பணத் தொகையை வசூலித்துக் கொண்டிருந்த ரஷ்யா 1990ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அதன் கடுமையான ஆகாரப் பற்றாக்குறை காரணமாகவும் பொருளாதார சீர்குலைவு காரணமாகவும், ரஷ்யாவை விட்டு வெளியேற விரும்பும் யூதர்கள் யாவரும் வெளியேறலாம்" என உத்தரவு பிறப்பித்தது.

இதன் மூலம் ஆண்டவர் ஏசாயா தீர்க்கதரிசிகளின் மூலம் (ஏசாயா 43:6,7) வசனங்களில் கி.மு. 712ம் ஆண்டிலேயே **'நான் வடக்கே நோக்கி கொடு என்றும், தெற்கே நோக்கி வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்திரத் திலிருந்து என் குமாரத்திகளையும் கொண்டுவர உள்ளேன்'** என்கிற முன்னுரைப்பு நிறைவேறியது.

ரஷ்யத் தலைவர் மிக்காயில் கார்பசேவ் 23.11.1990ம் தேதியும், மாஸ்கோ நகரத் தலைவர்கள் 29.11.1990ம் நாள் விடுத்த அவசர வேண்டுகோளை அடுத்து அநேக நாடுகள் ரஷ்யாவிற்கு உணவு தானியம், சிறுவர் உணவு இன்னும் மிக அத்தியாவசிய பண்டங்கள் முதலியவற்றை அனுப்பி வைத்தன.

ஜப்பான்: இரண்டாம் உலக மகா யுத்தம் முதல் ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நல்ல உறவு கிடையாது. என்றாலும் மனிதாபிமான அடிப்படையில் செர்னோபில் அணுக்கசிவு விபத்துக்கு உள்ளானவர்களின் மருத்துவ செலவுகளுக்காக இரண்டு கோடி டாலர் உதவி செய்தது.

ஜெர்மனி: சோவியத் யூனியனுக்கு 34 கோடி டாலர் பெறுமானமுள்ள உணவு பண்டங்களை 1990 டிசம்பர் முதல் வாரத்திலேயே அனுப்பியது. அவசர கால உதவியாக ஜெர்மன் செஞ்சிலுவை சங்கம் 35 டன் உணவுப் பண்டங்களை சோவியத் யூனியனுக்கு அனுப்பியது. ஜெர்மன் டெலிதான் என்கிற கம்பெனி உடனடியாக 2 லட்சம் டாலர் பெறுமானமுள்ள பண்டங்களை அனுப்ப முன்வந்தது.

இத்தாலி: சமாதானத்திற்காக ஒற்றுமை என்ற குழு 90 டன் உணவுப் பண்டங்களும், மருந்துகளும் அனுப்ப தீர்மானித்து, குந்தைகளுக்குத் தேவையான 14 டன் நிறையுள்ள பண்டங்களை முதல் தவணையாக 30.11.90 அன்றே மாஸ்கோவுக்கு அனுப்பியது.

பிரான்ஸ்: மிலான் நகரிலிருந்து 10 லட்சம் டாலர் பால், சோவியத் யூனியனுக்கு அசல் விலைக்கு விற்க முன்வந்தது. இதன் கிரயமான 9 லட்சம் டாலரை மிலான் பிரதேச அரசாங்கம் தானே ஏற்றுக் கொண்டது. (ஹிந்து நாளிதழ் 1.12.90)

இஸ்ரேல்: சின்னஞ்சிறு நாடான இஸ்ரேல் மாஸ்கோவுக்கு 15 டன் பால் பவுடர் விமானம் மூலம் அனுப்பி வைத்தது. (ஹிந்து நாளிதழ், 11.12.90)

ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள்: சோவியத் யூனியனுக்கு 1100 மில்லியன் (110 கோடி) டாலர் பெறுமானமுள்ள பொருட்களை உதவி செய்ய தீர்மானித்தது. (ஹிந்து நாளிதழ், 12.12.90)

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) : சோவியத் யூனியனுக்கு குளிர் காலத்தை சமாளிக்க 1000 பில்லியன் (100 கோடி) பெறமான தானியங்களும், உணவுப் பண்டங்களும் அனுப்ப தீர்மானித்து (ஹிந்து நாளிதழ் 12.12.90) அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் அமெரிக்காவிலிருந்து சோவியத் யூனியனுக்கு தானியம் வழங்குவதற்கு 1.5 மில்லியன் (150 கோடி) டாலர் கடனாகக் கொடுக்க அமெரிக்க அரசாங்கம் ஒப்புக் கொண்டிருப்பதாக ரஷ்யத் தலைவர் மிக்காயில் கார்பசேவ் தெரிவித்தார். இந்தக் கடன் 1991 ஜூன் மாதம் 60 கோடியும், அக்டோபர் மாதம் 50 கோடியும், 1992 பிப்ரவரி மாதம் 40 கோடியும் கொடுக்க தீர்மானித்துள்ளதாக அறிவித்தது. (ஹிந்து நாளிதழ், 13.6.91)

இந்தியா: சோவியத் யூனியனுக்கு கடனாக 10 லட்சம் டன் கோதுமையும், இனாமாக 20 ஆயிரம் டன் அரிசியும் இன்னும் மருந்துப் பொருட்களும், இதர அத்தியாவசியப் பண்டங்களும் அனுப்பியது. கோதுமை கடல் மார்க்கமாக கப்பல்களிலும், இதர அத்தியாவசியப் பண்டங்கள் விமானங்கள் மூலமாகவும் அவசரமாக அனுப்பவும் நடவடிக்கை எடுத்தது. (ஹிந்து 14.12.1990) செர்னோவில் அணுக்கசிவு விபத்துக்குள்ளான வர்களின் மருத்துவச் செலவுக்கும், மருத்துவ சாதனங்களுக் குமாக ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை ஒன்றை இந்தியா சோவியத் தலைவரிடம் கொடுத்தது. (ஹிந்து, 15.12.90)

மொத்தம் 21 நாடுகளிலிருந்து உணவு தானியங்கள், உணவுப் பண்டங்கள், இன்னும் அத்தியாவசியப் பொருட்கள் சோவியத் யூனியனின் விமான நிலையங்களிலும், ரயில் நிலையங்களிலும், இறக்கப்பட்டன (ஹிந்து 16.12.90). இந்த நிலையைச் சீர்செய்ய ரஷ்ய அதிபர் மிகாயில் கர்ப்பசேவ் பல மாறுதல் களைக் கையாண்டார். அதனால் அவர் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. எனினும் அவர் கொண்டு வந்த மத சுதந்திரம் ஓரளவுக்கு நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. அநேகர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பயமின்றி ஜீவிக்க முடிகிறது. மதப் பிரச்சாரமும் தாராளமாக நடக்கிறது.

மாஜி அதிபர் மிகாயில் கார்ப்பசேவ் கொள்கையினால் சோவியத் யூனியன் 15 சுதந்திர நாடுகளாகப் பிரிந்து செயல்படத் துவங்கி இருக்கின்றன. என்றாலும் சுதந்திர நாடுகளின் கூட்டு என்ற ஒரு அமைப்பின் கீழ் அவைகள் செயல்படுகின்றன. அப்படி இருந்தும் ரஷ்யாவின் பொருளாதாரமோ அல்லது உணவு பற்றாக்குறையோ தீர்ந்தபாடில்லை. காரணம் ரஷ்யா தன் முழுக் கவனத்தையும் யுத்த தளவாடங்களை செய்வதிலும், அவைகளை அரபு நாடுகளுக்கு விற்பதிலும் செலுத்தி வருகிறது. இப்பொழுது அநேகமாக, எல்லா அரபு நாடுகளிலும் நில எண்ணெயினால் கிடைக்கும் பெரும் செல்வத்தை யுத்த தளவாடங்கள் வாங்கிக் குவிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இவைகள் யாவும் தற்காப்புக்கு என்று கூறிக் கொண்டாலும், அவைகள் பின்னொரு காலத்தில் இஸ்ரேல் நாட்டுக்கு விரோதமாக உபயோகிக்கப்படும் என்று எண்ண இடமுண்டு. ஏனென்றால், எசேக்கியல் 30, 39ம் அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் ரஷ்ய இஸ்ரேலிய யுத்தம் நேரிடும் போது ரஷ்யாவுடன் சேர்ந்து பல அரபு நாடுகளும் இஸ்ரேல் மேல் யுத்தத்திற்கு வருவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னோடியாக அரபு நாடுகள் நவீன யுத்த தளவாடங்களை சேகரித்துக் கொண்டிருக்கின்றன.

இதுநாள் வரைக்கும் யுத்த தளவாடங்களைப் பெருக்கும் நோக்கமே இல்லாத ஆறு வளைகுடா கூட்டு அரபு நாடுகள் இப்பொழுது ஒரு போர்த்தளவாட கண்காட்சியை ஐக்கிய அரசு குடியரசில் 1995 மார்ச் 19 முதல் 23ம் தேதி வரை நடத்தின. நடத்தி தங்களுக்கு வேண்டிய தற்காலிக யுத்த தளவாடங்களை வாங்கியுள்ளன. இந்த கண்காட்சிக்கு 40 நாடுகளிலிருந்து 519 கம்பெனிகள் தங்கள் தளவாடங்களைக் கொண்டு வந்து காட்சிக்கு வைத்தன (ஹிந்து, 19.1.95). யுத்த தளவாடங்கள் செய்வதில் அமெரிக்காவும், ரஷ்யாவும், சீனாவும் போட்டி யிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆயுத உற்பத்தியில் ரஷ்யாவும் சீனாவும் முன்னேறினாலும், உணவுப் பிரச்சினை என்று வரும்போது இரு நாடுகளுமே இன்னும் பின்தங்கியவைகளாக இருக்கின்றன.

ஆயுதப் படைக் குறைப்பு, சமாதானம், சமாதானம் என்று கூறிக் கொண்டே உலக நாடுகள் புதுப்புது ஆயுதங்களைக் கண்டு

பிடிப்பதிலும், சேர்த்து வைப்பதிலும் முழுக் கவனத்தையும் செலுத்துகின்றன. இதைப் பற்றி ஆண்டவர் எரேமியா தீர்க்கதரிசி மூலமாக கூறியிருப்பதைப் பாருங்கள்.

எரேமியா 6:14, 8:11: **'சமாதானமில்லாதிருந்தும் சமாதானம், சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய் குணமாக்குகிறார்கள்.'**

இன்னும் ஆயுதக் குறைப்பு, ஆயுதக் குறைப்பு என்று உடன்படிக்கைகளில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந் தாலும், ரஷ்யா அந்த உடன்படிக்கையை அமுல்படுத்தாமலும், ஆயுதங்களைக் குறைக்காமலும் பதுக்கி வைத்துக் கொண்டே இருக்கிறது என பல ராஜ்ஜிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரோமச் சக்கரவர்த்திகள் சாபத்திற்குள்ளானார்கள்

ஆதியில் இந்த உலகில் கிறிஸ்தவத்திற்கு பயங்கர எதிரிகளாக இருந்தவர்கள் ரோமச் சக்கரவர்த்திகள். அவர்களைப் பொருத்தவரை அரசரையே தெய்வமாக வழிபட வேண்டும். வேறு எவரையும், எதையும் தெய்வமாக கும்பிடக் கூடாது என்பது ரோமச் சட்டம். இது நீரோ மன்னர் காலத்திலிருந்து தொடங்கியது. அரசருக்கு முன் வைக்கப்படுகிற எந்த விண்ணப்பமும், 'என் தேவனே, என் இறைவனாகிய நீரோவே' என்றுதான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் இதை எதிர்த்து மறுப்பு தெரிவித்தார்கள். அது ராஜத் துரோகமாக கருதப்பட்டு அவர்கள் அனைவரும் ஈவு இரக்கமில்லாமல் கொலை செய்யப்பட்டனர். நீரோவிற்குப் பிறகு அரசாண்ட பத்து மன்னர்களும் அதே சிஸ்டத்தையே கடைப்பிடித்தனர். இருந்தும் கிறிஸ்துவம் செழித்தோங்கி வளர்ந்து பரவியது.

கான்ஸ்டன்டைன் பதினோராவது சக்கரவர்த்தியாக, கி.பி. 312ல் அவர் பதவி ஏற்றான். அவன் உடனே அரசுப் பணிகளில் ஈடுபடவில்லை. ஓரிடத்தில் மிகவும் அமைதியாக அமர்ந்து ரோம சரித்திரத்தின் முடிவை ஆராய்ந்தான். அவனுக்கு முன்பு ஆண்ட பத்து சக்கரவர்த்திகளில் யாருக்குமே ஒரு அமைதியான,

நிம்மதியான முடிவு, மரணம் இருந்தது இல்லை என்பதை மிகவும் நடுக்கத்தோடும், ஆச்சரியத்தோடும் கண்டு கொண்டான்.

நீரோ மன்னன் துயரம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டான். டொமிஷன் **(Domition)** அவனுடைய சொந்த வேலைக்காரர்களாலே கொலை செய்யப்பட்டான். ஹாட்ரியன் (Hadrian) ஒரு மிகக் கொடூரமான நோயால் பாதிக்கப்பட்டு, தாங்க முடியாத வேதனையிலும் வலியிலும் உயிரிழந்தான். செவரஸ் (Severas) அவனுடைய மகனாலேயே கொலை செய்யப்பட்டான். அவன் மூன்று ஆண்டுகள் மட்டுமே ஆண்டு, அகால மரணமடைந்தான். டெஸியஸ் **(Decius)** ஒரு புதை மண்ணில் சிக்கி அழிந்து அவனுடைய பாடியே கிடைக்காமல் போயிற்று. வலேயரியன் **(Valerian)** பெர்சியர்களால் அப்படியே உயிரோடு தோலுரிக்கப்பட்டான்.

டயோகிளிஷியன் **(Diocletian)** அரியாசனத்திலிருந்து அகற்றப்பட்டு, பைத்தியம் பிடித்து பரிதாபமாக இருந்தான். மேக்சிமனஸ் **(Maximanus)** பதவி இழந்து, இறுதியில் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்தான். ஜுலியன் **(Julian)** இயேசு கிறிஸ்து என்கிற பெயரையே இந்த பூமியிலிருந்து ஒழித்து விடுவேன் என சபதம் செய்தான். கடைசியில் அவன் யுத்த காலத்தில் சாகின்ற சமயத்தில் தன்னுடைய ரத்தத்தையே கையில் எடுத்து வானத்தை நோக்கி எறிந்து 'ஓ நசரனே, நீ ஜெயித்து விட்டாய்' என்று கூறி உயிரை விட்டான்.

கான்ஸ்டன்டைன் நல்ல ஞானமுள்ளவனாக, புத்திசாலியாக இருந்தமையால் இவைகள் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து கிறிஸ்துவை இறைவனாக ஏற்றுக் கொண்டு, கிறிஸ்துவத்தையும் அரவணைத்து, தம் குடி மக்களும் கிறிஸ்துவத்தை தழுவி ஏற்றுக் கொள்ள வாசல்களைத் திறந்தான். அவன் கி.பி. 713ல் ஒரு அரசாணையை வெளியிட்டு ஐரோப்பிய கண்டத்தை ஒரு கிறிஸ்தவ நாடாக பிரகடனம் செய்தான். ரோமன் கத்தோலிக்க திருச்சபைகள் உலகம் முழுக்க அவன் மூலமாக ஸ்தாபிக்கப்பட்டன.

இதை நான் ஏன் எழுதுகிறேன்?

வெளி 10:6 கூறுகிறது. **'இனி காலம் இல்லை'** என்று. நாம் இந்த

யுகத்தின் இறுதியை நெருங்கிக் கொண்டு இருக்கிறோம். நாம் வாழும் இந்த உலகத்திற்கு என்ன நடக்கப் போகிறது என்பதை எண்ணும்போது உள்ளமே நடுங்குகிறது. சமீபத்தில் *சீனா* ஒரு அணுகுண்டை வெடித்தது. ஹீரோஷிமா, நாகாசாகியில் போடப் பட்ட அணுகுண்டை விட 40 மடங்கு சக்தி வாய்ந்தது அது. 90 லட்சம் ஜனங்களை அது அழிக்க வல்லது. பல தேசங்கள் கொள்ளை நோய்களைப் பரப்பும் கொடிய கிருமிகளைக் கொண்ட அணுகுண்டுகளை தயாரித்து வைத்திருக்கின்றனர். அந்த குண்டுகள் நாம் நினைத்தும் பார்க்க முடியாத கொடிய கொள்ளை நோய்களைப் பரப்பி மனித சமுதாயத்தையே அழித்துவிடும் சக்தி வாய்ந்தவைகள். இந்த உலகம் பைத்தியம் பிடித்த நிலையில் இருக்கிறது.

இந்த பூமியில் பூரண சமாதானம் இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியில்தான் கிடைக்கும். அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே பரிசுத்தவான்கள் (இயேசுவின் மணவாட்டி சபை) எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 தெச 4:16-17). ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் போது நாம் எடுத்துக் கொள்ளப்பட நீதியோடு, நேர்மையோடு, உண்மை யோடு, உத்தமத்தோடு, பரிசுத்தத்தோடு வாழ்ந்து, இயேசு கிறிஸ்துவின் அன்பையும், நற்பண்புகளையும் நாம் இவ்வுலகிற்கு காட்டுவோம். மற்றவர்களையும் ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தப்படுத்துவோமா? கர்த்தரின் கிருபையின் கரம் நம்மோடும், நம் தேசத்தோடும், நம் தேசத்தை ஆளும் தேசத் தலைவர்களோடும் என்றென்றும் இருப்பதாக!

அன்புடன்
உங்கள் சகோதரன்
எஸ்.தாயப்பன்

ஆசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 72 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும். பின்னர் பென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 3000க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777